10

# டால்பின்®

உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

100/100 உறுதி



**இணைப்பு**

- மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு
- PTA, அரசுத்தேர்வு வினா-விடைத்தொகுப்பு

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

## ஆர்டர்களுக்கு மாவட்ட வாரியாக எங்கள் நிர்வாக எண்களை தொடர்பு கொள்ளவும்.

| மாவட்டம் | எண் |
| --- | --- |
| அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு | 98653 06197 |
| கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி | 89256 77710 |
| நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை | 99435 67646 |
| இராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி | 99435 67646 |
| தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி | 93453 14146 |
| திருப்பத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, நீலகிரி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் | 93453 30937 |

எங்களது ஒரே நிறுவனம் டால்பின் பப்ளிகேசன்ஸ் மட்டுமே. எங்களுக்கு வேறு இணை நிறுவனங்கள் எதுவும் கிடையாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# டால்பின்®

10

உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

சிறப்பு அம்சங்கள்

- ✷ பாட நூலின் வினா- விடைத்தொகுப்பு
- ✷ கூடுதல் வினா- விடைத்தொகுப்பு
- ✷ பெற்றோர் ஆசிரியர் கழக (PTA) வினா- விடைத்தொகுப்பு
- ✷ அரசுத் தேர்வு வினா - விடைத் தொகுப்பு
- ✷ மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு


நூலாசிரியர்
முனைவர். இரா.ஜான் சாமுவேல்
எம்.ஏ,பி.எட்,எம்.பில், பி.எச்.டி
பட்டதாரி தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.

மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு
நூலாசிரியர்
முனைவர். மு.சந்திரவடிவு
எம்.ஏ,பி.எட்,எம்.பில், பி.எச்.டி
பட்டதாரி தமிழாசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அவிநாசி.



✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ. 252

# பதிப்புரை

அன்புள்ள மாணவ மாணவிகளே!

தன்னம்பிக்கை

விடாமுயற்சி

கடின உழைப்பு

இம்மூன்றும் உங்களிடம் இருக்கும் வரை வெற்றியினை எவராலும் தடுக்க இயலாது.

விழிகளைத் திறக்கும் வரை
கண் இமைகூட உனக்குப் பாரமாகத்தான் தெரியும் – நீ
விழித்தெழுந்தால் அந்த சூரியனின் சுடர் கூட
உன்முன் சின்னப் பொறியாகவே தோன்றும்.

எனவே தன்னம்பிக்கையோடு எதையும் செய்யுங்கள். நீங்கள் எதைப் படித்தாலும் புரிந்து படியுங்கள். நீங்கள் அனைவரும் எளிதில் புரிந்து படிக்கும் வகையிலும் பொதுத் தேர்வு வினாத்தாள் வடிவமைப்பின் அடிப்படையிலும் உன்னால் முடியும் என்னும் இக்கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

என்னும் ஔவையாரின் பாடல் வரிகளுக்கேற்ப பயிற்சியும் முயற்சியும் இருந்தால் எதுவும் நமக்குச் சாத்தியமே என்பதை உணர்ந்து ஒவ்வொரு நாளும் படிப்பதைப் பிழையின்றி எழுதிப் பழகுங்கள். உங்களால் முடியாதது என்று எதுவும் இல்லை.

ஒவ்வொரு பாடத்திலும் 100/100 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தின் முதல் இடத்தைப் பிடிக்க எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.com**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

### ICICI BANK

A/C No : 446005500030

IFSC CODE : ICIC0004460

BRANCH : Srivilliputtur

### CITY UNION BANK

A/C No : 328109000204092

IFSC CODE : CIUB0000328

BRANCH : Srivilliputtur

### TAMILNADU MERCANTILE BANK

A/C No : 328150310875103

IFSC CODE : TMBL0000328

BRANCH : Srivilliputtur

### KARUR VYSYA BANK

A/C No : 1804135000006000

IFSC CODE : KVBL0001804

BRANCH : Srivilliputtur

ICICI Bank iMobile BHIM pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**

**✷ பணம் / G-PAY செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | பாடப்பகுதியும், ஆசிரியர்களும் | | | i |
| | மனப்பாடப் பகுதிகள் | | | ii |
| | அறிவை விரிவு செய் | | | vi |
| 1. | மொழி | | அமுத ஊற்று | 1 |
| | | செய்யுள் | அன்னைமொழியே! ✸ | 15 |
| | | உரைநடை | தமிழ்ச்சொல் வளம் | 18 |
| | | செய்யுள் | இரட்டுற மொழிதல் | 22 |
| | | துணைப்பாடம் | உரைநடையின் அணிநலன்கள் | 24 |
| | | இலக்கணம் | எழுத்து, சொல் | 24 |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல் | | உயிரின் ஓசை | 27 |
| | | உரைநடை | கேட்கிறதா என் குரல்! | 42 |
| | | செய்யுள் | காற்றே வா! | 45 |
| | | | முல்லைப்பாட்டு ✸ | 47 |
| | | துணைப்பாடம் | புயலிலே ஒரு தோணி | 49 |
| | | இலக்கணம் | தொகைநிலைத் தொடர்கள் | 50 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 3. | பண்பாடு | கூட்டாஞ்சோறு | | 53 |
| | | வாழ்வியல் இலக்கியம் திருக்குறள் | | 69 |
| | | உரைநடை | விருந்து போற்றுதும்! | 73 |
| | | செய்யுள் | காசிக்காண்டம் ✷ | 76 |
| | | | மலைபடுகடாம் | 78 |
| | | துணைப்பாடம் | கோபல்லபுரத்து மக்கள் | 81 |
| | | இலக்கணம் | தொகாநிலைத் தொடர்கள் | 82 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✷ | 84 |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம் | நான்காம் தமிழ் | | 87 |
| | | உரைநடை | செயற்கை நுண்ணறிவு | 103 |
| | | செய்யுள் | பெருமாள் திருமொழி ✷ | 108 |
| | | | பரிபாடல் | 111 |
| | | துணைப்பாடம் | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 113 |
| | | இலக்கணம் | இலக்கணம் – பொது | 114 |
| 5. | கல்வி | மணற்கேணி | | 117 |
| | | உரைநடை | மொழிபெயர்ப்புக் கல்வி | 130 |
| | | செய்யுள் | நீதி வெண்பா ✷ | 134 |
| | | | திருவிளையாடற் புராணம் ✷ | 136 |
| | | துணைப்பாடம் | புதிய நம்பிக்கை | 140 |
| | | இலக்கணம் | வினா விடை வகைகள், பொருள்கோள் | 141 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 6. | கலை,அழகியல், புதுமைகள் | நிலா முற்றம் | | 144 |
| | | வாழ்வியல் இலக்கியம் திருக்குறள் | | 163 |
| | | உரைநடை | பன்முகக் கலைஞர் | 165 |
| | | செய்யுள் | பூத்தொடுத்தல் | 169 |
| | | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ✸ | 170 |
| | | | கம்பராமாயணம் ✸ | 172 |
| | | இலக்கணம் | அகப்பொருள் இலக்கணம் | 174 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ✸ | 177 |
| 7. | நாகரிகம், நாடு, சமூகம் | விதை நெல் | | 180 |
| | | உரைநடை | சிற்றகல் ஒளி (தன் வரலாறு) | 195 |
| | | செய்யுள் | ஏர் புதிதா? | 199 |
| | | | மெய்க்கீர்த்தி | 201 |
| | | | சிலப்பதிகாரம்✸ | 204 |
| | | துணைப்பாடம் | மங்கையராய்ப் பிறப்பதற்கே..... | 207 |
| | | இலக்கணம் | புறப்பொருள் இலக்கணம் | 211 |
| 8. | அறம்,தத்துவம், சிந்தனை | பெருவழி | | 214 |
| | | உரைநடை | சங்க இலக்கியத்தில் அறம் | 236 |
| | | செய்யுள் | ஞானம் | 240 |
| | | | காலக்கணிதம் ✸ | 243 |
| | | இலக்கணம் | பா – வகை. அலகிடுதல் | 244 |
| 9. | மனிதம்,ஆளுமை | அன்பின் மொழி | | 246 |
| | | உரைநடை | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) | 264 |
| | | செய்யுள் | சித்தாளு | 266 |
| | | | தேம்பாவணி ✸ | 268 |
| | | இலக்கணம் | அணி | 270 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | 272 |
| 2. | விடைக்கேற்ற வினா அமைக்க | 281 |
| 3. | பகுபத உறுப்பிலக்கணம் | 283 |
| 4. | கலைச்சொற்களை எழுதுதல் | 284 |
| 5. | பொருத்தமான நிறுத்தற்குறி இடுக | 285 |
| 6. | அணியிலக்கணம் | 286 |
| 7. | அலகிடுதல் | 288 |
| 8. | கடிதம் எழுதுதல் | 293 |
| 9. | படிவங்களை நிரப்புதல் | 301 |
| 10. | கட்டுரை | 303 |
| 11. | சொற்பொருள் எழுதுதல் | 315 |
| 12. | மெல்லக் கற்போர் கையேடு | 318 |
| 13. | வினா வங்கி | 351 |

# பாடப்பகுதியும், ஆசிரியர்களும்

## செய்யுள்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| அன்னை மொழியே | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| இரட்டுற மொழிதல் | சந்தக்கவிமணி தமிழழகனார் |
| காற்றே வா! | பாரதியார் |
| முல்லைப்பாட்டு | நப்பூதனார் |
| காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர் |
| மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் |
| பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| பரிபாடல் | கீரந்தையார் |
| நீதிவெண்பா | கா.ப.செய்குதம்பிப் பாவலர் |
| திருவிளையாடற்புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| பூத்தொடுத்தல் | உமா மகேஸ்வரி |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| கம்பராமாயணம் | கம்பர் |
| ஏர் புதிதா? | கு.ப.ராஜகோபாலன் |
| மெய்க்கீர்த்தி | இரண்டாம் இராசராச சோழன் |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| ஞானம் | தி.சொ.வேணுகோபாலன் |
| காலக்கணிதம் | கண்ணதாசன் |
| சித்தாளு | நாகூர் ரூமி |
| தேம்பாவணி | வீரமாமுனிவர் |

## உரைநடை

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| தமிழ்ச்சொல் வளம் | தேவநேயப் பாவாணர் |
| சிற்றகல் ஒளி | ம.பொ.சிவஞானம் |

## துணைப்பாடம்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| உரைநடையின் அணிநலன்கள் | எழில்முதல்வன் |
| புயலிலே ஒரு தோணி | ப.சிங்காரம் |
| கோபல்லபுரத்து மக்கள் | கி.ராஜநாராயணன் |
| புதிய நம்பிக்கை | கமலாலயன் |
| பாய்ச்சல் | சா.கந்தசாமி |
| ஒருவன் இருக்கிறான் | கு.அழகிரிசாமி |

# மனப்பாடப் பகுதிகள்

## அன்னை மொழியே!

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

**(பெ.ஆ.க.4, செப்.2021, மே.2022, ஜீன்.23)**

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

(**பெ.ஆ.க.1, 6, மார்ச்.24**)

## முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், ''கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்'' என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். **(பெ.ஆ.க.3)**

- நப்பூதனார்

## காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே. **(பெ.ஆ.க.2, 5)**

- அதிவீரராம பாண்டியர்

## திருக்குறள்

### மெய் உணர்தல்

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. **(ஜீன்.23)**

### பெரியாரைத் துணைக்கோடல்

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**(பெ.ஆ.க.4, 5, செப்.2021, ஆகஸ்ட்.22)**

### கண்ணோட்டம்

11. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்;
கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். **(அ.மா.தே.)**

### ஆள்வினை உடைமை

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். **(மே-2022, மார்ச்.24)**

## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

- குலசேகராழ்வார் **(அ.மா.தே, ஆகஸ்ட்.22, மார்ச்.24)**

## நீதி வெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று. **(ஏப்ரல்.23)**

- கா.ப.செய்குதம்பிப் பாவலர்

## திருவிளையாடற்புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

- பரஞ்சோதி முனிவர். **(பெ.ஆ.க-5,செப்-20)**

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

### ஆடுக செங்கீரை!

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழுரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக் **(பெ.ஆ.க-4)**
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

- குமரகுருபரர்.

## கம்பராமாயணம்

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

(35) **(செப்.2021)**

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்

(1926) - **கம்பர்**

## திருக்குறள்

### அமைச்சு

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். **(பெ.ஆ.க-1, ஏப்ரல்.23)**

### பொருள் செயல் வகை

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

### குடிசெயல்வகை

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

### நல்குரவு

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

## சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; - இளங்கோவடிகள்

**(பெ.ஆ.க-1,6, ஆகஸ்ட்.22, ஜீன்.23)**

## காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை! **(ஏப்ரல்.23)**
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்! **(பெ.ஆ.க-3)**
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

**- கண்ணதாசன்**

## தேம்பாவணி

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

**- வீரமாமுனிவர்**

**(பெ.ஆ.க-2, அ.மா.தே., செப்-20, மே-2022)**

# அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் | **முனைவர் சேதுமணி மணியன்** |
| தவறின்றித் தமிழ் எழுதுவோம் | **மா.நன்னன்** |
| பச்சை நிழல் | **உதயசங்கர்** |
| குயில்பாட்டு | **பாரதியார்** |
| அதோ அந்தப் பறவை போல | **ச. முகமது அலி** |
| உலகின் மிகச்சிறிய தவளை | **எஸ். ராமகிருஷ்ணன்** |
| திருக்குறள் தெளிவுரை | **வ.உ. சிதம்பரனார்** |
| சிறுவர் நாடோடிக் கதைகள் | **கி. ராஜநாராயணன்** |
| ஆறாம் திணை | **மருத்துவர் கு.சிவராமன்** |
| பஞ்ச பூதங்களின் அறிவியல் கதைகள் | **நீலமணி** |
| அன்றாட வாழ்வில் அறிவியல் | **ச. தமிழ்ச்செல்வன்** |
| காலம் | **ஸ்டீபன் ஹாக்கிங்** |
| சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று | **தமிழில் வல்லிக்கண்ணன்** |
| குட்டி இளவரசன் | **தமிழில் வெ.ஸ்ரீராம்** |
| ஆசிரியரின் டைரி | **தமிழில் எம்.பி.அகிலா** |
| தேன்மழை | **சுரதா** |
| திருக்குறள் நீதி இலக்கியம் | **க.த.திருநாவுக்கரசு** |
| நாட்டார் கலைகள் | **அ.கா.பெருமாள்** |
| என் கதை | **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்** |
| வேருக்கு நீர் | **ராஜம் கிருஷ்ணன்** |
| நாற்காலிக்காரர் | **ந. முத்துசாமி** |
| அறமும் அரசியலும் | **மு. வரதராசனார்** |
| அபி கவிதைகள் | **அபி** |
| எண்ணங்கள் | **எம்.எஸ். உதயமூர்த்தி** |
| யானை சவாரி | **பாவண்ணன்** |
| கல்மரம் | **திலகவதி** |
| அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் | **ந.முருகேசபாண்டியன்** |





எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

- பாரதிதாசன்

# இயல் ஒன்று
## மொழி

# அமுதஊற்று

## திறன் அறிவோம்(பக்கம்.19)

### பலவுள் தெரிக.

1. ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது **(ஜீன்.23)**
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும்கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும் **[அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்]**

2. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது- **(அ.மா.தே, செப்.21, ஆகஸ்ட்.22, ஏப்ரல்.23)**
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
**[ஈ) சருகும் சண்டும்]**

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்- **(ஜீன்.23)**
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
**[இ) எம் + தமிழ் + நா]**

4. ‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே- **(பெ.ஆ.க-3, மார்ச்-24)**
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்
**[ஈ) பாடல்; கேட்டவர்]**

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை- **(பெ.ஆ.க-4, மே-2022)**
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
**[ஆ) மணி வகை]**

6. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் **(பெ.ஆ.க-2)**
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார் இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்
**[ஈ) இரா.இளங்குமரனார்]**

7. இலையுதிர்காலம் ..................... சருகாயின!
மழைக்காலம் ..................... தழைத்தன!
சருகுகளோ செழுமையான உரங்களாயின!
- புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக. **(பெ.ஆ.க-4)**
அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின
ஆ) காடெல்லாம், வளர்ந்தன
இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்
ஈ) மலையெல்லாம், முளைத்தன **[இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்]**

8. **தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது** **(பெ.ஆ.க-1)**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற் பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**[ஈ) வினையாலணையும் பெயர்]**

9. **கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க.** **(பெ.ஆ.க-1)**

(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)

அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, குளம், அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.

ஈ)மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

**[இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.]**

10. **சோலையில் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.** **(பெ.ஆ.க-1)**

அ) பூஞ்சோலை - அரும்புகள் ஆ) மலை - எறும்புகள் - தேன்

இ) மலர்வனத்தில்- வண்டுகள் - தேன் ஈ) கானகம் - வண்டுகள் - நீர்

**[இ) மலர்வனத்தில்- வண்டுகள் - தேன்]**

11. **வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்** **(பெ.ஆ.க-6)**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**[அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை]**

12. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்** **(அ.மா.தே)**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர் இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்

**[ஈ) கலவைத்தொடர்]**

13. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.** **(செப்.20)**

**(1) வினைமுற்று** - (i) கெடு

**(2) தொழிற்பெயர்** - (ii) கட்டு

**(3) முதனிலைத் தொழிற்பெயர்** - (iii) எய்தல்

**(4) வினையடி** - (iv) வந்தான்

அ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i) ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii) ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (ii), (4) - (iv)

**[இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)]**

14. **'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்?** **(ஆகஸ்ட்.22)**

அ) தமிழழகனார் ஆ) கம்பர் இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

**[இ) தேவநேயப் பாவாணர்]**

15. **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு** **(மார்ச்.24)**

அ) இந்தியா ஆ) மலேசியா இ) சிங்கப்பூர் ஈ) சீனா **[ஆ) மலேசியா]**

## குறுவினா

1. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

**(பெ.ஆ.க-2, மார்ச்.24)**

- வேங்கை - தனிமொழியின் பொருள் - வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (அல்லது) புலியைக் குறிக்கும்.
- வேம் + கை - தொடர்மொழியின் பொருள் - வேகின்ற கையைக் குறிக்கும்.
- வேங்கை என்னும் சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் நின்று பொருள் தருவதால் இது பொதுமொழி ஆயிற்று.

2. **'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக. (அ.மா.தே)**

- சீவக சிந்தாமணி
- குண்டலகேசி
- வளையாபதி

3. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக. (மார்ச்.24)**

**சரியான தொடர்கள்:**

- ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. இவ்விரண்டு தொடர்களும் சரியான தொடர்களாகும்.

**பிழையான தொடர்கள்:**

- ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன என்பது தவறான தொடராகும்.
- தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும் சொல் ஆகும். சீப்பு என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும். எனவே மேற்கண்ட தொடர் பிழையானது ஆகும்.

4. **''உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்'' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக. (பெ.ஆ.க-6, ஆகஸ்ட்.22)**

- உடுப்பதூஉம், உண்பதூஉம் - இவ்விரு சொற்களும் இன்னிசை அளபெடை வகையைச் சார்ந்தது ஆகும்.
- இன்னிசை அளபெடையின் இலக்கணம் : செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காகக்குறிலெழுத்து நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

5. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக. (மார்ச்.24)**

- காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அனைவரும் அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., ''அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே! என்றார்.
- எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.
- மேற்கண்ட நிகழ்வே தற்கால உரைநடையில் சிலேடை நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

6. **தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக. (மே-2022)**
- நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி (அ) வடலி, பைங்கூழ்

7. **''கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல்'' - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக. (பெ.ஆ.க-5)**
- கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இவ்விரு சொற்களும் இன்னிசை அளபெடை வகையைச் சார்ந்தது ஆகும்.
- இன்னிசை அளபெடையின் இலக்கணம் : செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காகக் குறிலெழுத்து நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

8. **தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது? (அ.மா.தே.)**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த்தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது. |
| சான்று: நடத்தல் | சான்று : நடந்தவர் |

9. **பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை? (அ) பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக. (ஆகஸ்ட்.22)**
- அரும்பு, போது, மலர், வீ, செம்மல் ஆகியன பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களாகும்.

10. **தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறு கூலங்கள் யாவை? (ஏப்ரல்.23)**
- வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டில் மட்டுமே விளைகின்றன.

## சிறுவினா

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? (பெ.ஆ.க-2. மே-2022)**
- அன்னை மொழியே! அழகு நிறைந்த செந்தமிழே!
- பழமைக்கு பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
- பாண்டிய மன்னனின் மகளே!
- திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே!
- பதினெண் கீழ்க்கணக்கே!
- நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
- பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட செழுமை மிக்க தமிழே!
- உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.
- எம் தனித்தமிழே! உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.
  - எனப் பாவலரேறு தமிழன்னையை வாழ்த்துகிறார்.

2. **'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க. (பெ.ஆ.க-3, மே-2022)**
- கத்தரி நாற்று வாங்கச் சந்தைக்குச் சென்றேன்.
- என் வீட்டுத்தோட்டத்தில் வாழைக்கன்று நட்டு வைத்தேன்.
- திருமணத்தில் தாம்பூலத்தோடு மாங்கன்றும் அளித்தார்கள்.
- அன்று தோட்டத்தில் தென்னம் பிள்ளையை நட்டேன். இன்று அது என் வீட்டிற்கு மிகுந்த பயனளிக்கிறது.
- இன்று கற்பகத்தரு என்று அனைவராலும் புகழப்படும் பனை வடலியை அனைவரும் நட்டு வளர்க்க வேண்டும்.

3. **'<u>அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது</u>' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.** **(மார்ச்.24)**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அறிந்தது, அறியாதது | அறிதல், அறியாமை |
| புரிந்தது, புரியாதது | புரிதல், புரியாமை |
| தெரிந்தது, தெரியாதது | தெரிதல், தெரியாமை |
| பிறந்தது, பிறவாதது | பிறத்தல், பிறவாமை |

4. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக. (ஏப்ரல்.23)** (அல்லது) **தமிழையும் கடலையும் ஒப்பிட்டு இரட்டுற மொழியும் பாங்கினைச் சந்தக்கவிமணி தமிழழகனார் வழி நின்று விளக்குக. (பெ.ஆ.க-6)**

**தமிழ்:**

- தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

**கடல்:**

- கடல், அமிழ்ந்து எடுத்தலால் முத்தினைத் தருகிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
- மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது.
- நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காக்கிறது.

## நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (பெ.ஆ.க-5, ஆகஸ்ட்.22, ஜீன்.23)**

- தமிழன்னையை வாழ்த்தாத தமிழ்ப்புலவர்கள் எவரும் இல்லை. ஆனால் இவ்விருவரைப்போல் தமிழன்னைக்கு வாழ்த்துப் பாடியவர் ஒருவரும் இல்லை என்றே கூறலாம். ஆம்! மனோன்மணீயம் சுந்தரனாரையும், பெருஞ்சித்திரனாரையும் தான் அறுதியிட்டுக் கூறுகிறேன்.
- தமிழ் அன்னையை மிக உயர்வாகப் புகழ்ந்திருக்கும் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் கருத்தைக் கூறுகிறேன். சற்றே கேளுங்கள்.
- கடலெனும் ஆடை உடுத்திய நிலமெனும் பெண்ணுக்குப் பரதகண்டம் முகமாகத் திகழ்கிறது.
- அக்கண்டத்தில் தென்னாடும் அதில் சிறந்து விளங்கும் திராவிட நாடும் பிறை போன்ற நெற்றியாகவும் அதில் இடப்பட்ட திலகமாகவும் திகழ்கின்றன.
- அத்திலகத்திலிருந்து வரும் வாசனைபோல், அனைத்து உலகமும் இன்பம் பெறும் வகையில், எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி இருந்த தமிழ்ப் பெண்ணே! (தெய்வமே) உன் சிறப்பு மிகுந்த இளமைத் திறத்தை வியந்து, எங்களுடைய செயலை மறந்து உன்னை வாழ்த்துவமே! வாழ்த்துவமே! என்கிறார்.
- என்னே! அருமையான வரிகள். இவ்வரிகளைத்தான் நாம் மொழி வாழ்த்தாக நாள்தோறும் பாடிக்கொண்டிருக்கிறோம்.
- இதோ பெருஞ்சித்திரனார் தமிழன்னையை வாழ்த்தும் வரிகளின் கருத்துகளையும் காண்போம்.
- அழகு நிறைந்த செந்தமிழே!., பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!

- ❖ குமரிக் கண்டத்தில் நிலைத்து நின்று அரசாண்ட மண்ணுலகின் பேரரசே!
- ❖ பாண்டிய மன்னனின் மகளே! பத்துப் பாட்டும் எட்டுத்தொகையுமான பதினெண் மேற்கணக்கே, பதினெண் கீழ்க்கணக்கே!
- ❖ திருக்குறளின் பெருமையே!
- ❖ ஐம்பெருங்காப்பியங்களாகத் திகழும் அணிகலமே!
- ❖ 'உன்னைப் பற்றிப் பொங்கி எழும் நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகிறேன்' என்று தமிழன்னையைப் பாவலரேறு வாழ்த்துகிறார்.
- ❖ நன்றி! வணக்கம்!

**சுருக்கமான விடை**

**தமிழ்த்தாய் வாழ்த்து:**

- ➢ பூமித்தாய் கடலை ஆடையாக உடுத்தியுள்ளாள்.
- ➢ பூமித்தாயின் முகமாகப் பரதக் கண்டம் உள்ளது.
- ➢ திராவிட நாடு பிறைபோன்ற நெற்றியாகவும்
- ➢ தமிழ்நாடு நெற்றியில் இட்ட திலகமாகவும் உள்ளது.
- ➢ திலகத்தின் மணம் போல் இளமையும் திறமையும் வாய்ந்த தமிழ்த்தாயின் புகழ் எல்லாத் திசைகளிலும் மணக்கிறது.

**தமிழ் வாழ்த்து:**

அன்னை மொழியே! அழகான மொழியே!
பழமையான மொழியே! குமரிக் கண்டத்தை ஆண்ட மொழியே!
பாண்டியன் மகளே! பத்துப்பாட்டே!
எட்டுத்தொகையே! நற்கணக்கே!
ஐம்பெருங்காப்பியமே! திருக்குறளின் பெருமையே!
உன் தனிச்சிறப்பும் நீண்ட நிலைத்த தன்மையும்
வேற்று மொழியார் உரைத்த புகழுரையும்
எமக்குள் பற்றுணர்வை ஏற்படுத்துகிறதே!
செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே!
உன் பெருமையை எப்படி உரைப்பேன்.

**ஒப்பிடு:**

- ➢ மனோன்மணியம் சுந்தரனார் தமிழின் மணம் உலகெலாம் மணக்கிறது என்கிறார்.
- ➢ பெருஞ்சித்திரனார் தமிழின் தனிச்சிறப்பும் இலக்கிய இலக்கண வளமும் நீண்ட நிலைத்த தன்மையும் பிற நாட்டாரைப் புகழும்படிச் செய்துள்ளது என்று பாடியுள்ளார்.
- ➢ இருவரும் தமிழின் புகழ் உலகெலாம் பரவியுள்ளது என்றே கூறுகின்றனர்.
- ➢ எனவே நாமும் தமிழுக்குப் பெருமை சேர்ப்போம்.

2. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை விரிவாக எழுதுக. (பெ.ஆ.க-3,செப்.2021,மே-2022)**

**தமிழின் சொல்வளம்:**

- ❖ சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும் தமிழ் மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
- ❖ திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்தமொழி தமிழ்.

- தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.
- தமிழிலுள்ள ஒரு பொருள் குறித்த பல சொல் பிற திராவிட மொழிகளில் கூட இல்லை.
- ஓர் எழுத்தே ஒரு சொல்லாக அமைவது தமிழ் மொழிக்கு உரிய சிறப்புகளில் ஒன்று.
- தாவர இனத்தில் ஓர் இலையின் வளர்ச்சி நிலையைக் கொழுந்து - தளிர் - இலை - பழுப்பு - சருகு எனக் குறிப்பிடுகிறது.
- தமிழ்மொழி ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச் சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்துள்ளது.
- தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது. ஏனெனில் தமிழ்மொழி ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வேர்ச் சொற்களைக் கொண்ட மொழி.

**புதிய சொல்லாக்கத்தின் தேவை:**

- தமிழ்மொழியில் நேரடியாக எழுதப்படும் நூல்களுக்கு இணையாக மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
- இந்திய மொழிகளிலிருந்து நேரடியாக இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- ஆங்கிலத்தின் வழியாக உலகம் முழுவதும் உள்ள பல மொழிகளில் வெளிவந்த பல துறைகளைச் சார்ந்த நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.
- இத்தகைய அறிவு, பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் நீண்ட நெடுங்காலமாக நடக்கின்றன என்றாலும், தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதை இன்னும் விரிவுபடுத்தியிருக்கிறது.
- மொழிபெயர்ப்பின்போது, வெவ்வேறு பண்பாட்டுச் சூழலுக்கேற்பப் பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கும் மொழிபெயர்ப்பாளர் சரியான வார்த்தைகள் கிடைக்காத பட்சத்தில் புதிய வார்த்தைகளையும் சொற்சேர்க்கைகளையும் உருவாக்க வேண்டியிருக்கிறது.

## சுருக்கமான விடை

**தமிழின் சொல்வளம்:**

- தமிழ்மொழி மிகுந்த சொல்வளம் கொண்டது.
- தமிழ்மொழி மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்டது.
- ஓர் எழுத்தே ஒரு சொல்லாக அமைவது தமிழின் சிறப்பு.
- தமிழிலுள்ள ஒரு பொருள் குறித்த பல சொற்கள் பிற திராவிட மொழிகளில் கூட இல்லை.
- பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தனித்து இயங்கும் ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு.
- பிற திராவிட மொழிகளின் சிறப்புச் சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்களே.
- பூவின் நிலைகளை - அரும்பு - போது - மலர் - வீ - செம்மல்
- தோலின் வகைகள் - தொலி - தோல் - தோடு - ஓடு - மட்டை - குடுக்கை
- இலையின் வகைகள் - இலை - தோகை - தாள் - ஓலை - சுருகு - சண்டு

- இவை தமிழ்ச் சொல் வளத்திற்குச் சில சான்றுகள்

**புதிய சொல்லாக்கத்தின் தேவை:**

- மொழிபெயர்ப்பின்போது புதிய சொற்களின் தேவை ஏற்படுகிறது.
- மொழி வளர புதிய சொற்கள் தேவை.
- மொழி நிலைபெற புதிய சொற்கள் தேவை.
- அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குப் பெயர் சூட்ட புதிய சொற்கள் தேவை.
- தமிழ்மொழி உலகளாவிய வளர்ச்சி பெற புதிய சொற்கள் தேவை.

3. **ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**
**சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.** **(ப.ஆ.க-2)**

**எழில்** : இனியா! இனியா! நான் வந்தது கூடத் தெரியாமல் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறாய்!

**இனியன்** : யார்?.... எழிலா?.... எப்பொழுது வந்தாய்.... வா..... வா...... நலமாக இருக்கிறாயா?

**எழில்** : நாங்கள் வீட்டிற்கு வந்து அரைமணி நேரம் ஆகிறது. அறையைவிட்டு வெளியே வராமல் என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்பதைப் பார்க்கத்தான் உன் உறைக்கு வந்தேன்.

**இனியன்** : தமிழ் நூல்களைப் படிக்க நுழைந்துவிட்டால் என்னையே நான் மறந்துவிடுவேன்.

**எழில்** : அப்படி என்னப்பா...... உன்னையே மறக்கும்படி அதில் உள்ளது.

**இனியன்** : தமிழ் பேச மட்டும் கற்றுக் கொண்ட நீ தமிழ் இலக்கிய நூல்களைப் படிக்க முயற்சி செய்தால் உனக்கும் அந்த அனுபவம் கிடைக்கும்.

**எழில்** : அழகாகப் பேசுகிறாய் இனியா!

**இனியன்** : உரைநடை இலக்கியத்தைப் படித்துப்பார் நீயும் இனிமையாகப் பேசுவாய்.

**எழில்** : உரைநடையா? உரைநடை என்றால் என்ன?

**இனியன்** : அதுவா! பேசினால் உரையாடல். எழுதினால் உரைநடை

**எழில்** : அருமை ரைமிங்கா (Rhyming) பதில் சொல்கிறாயே!

**இனியன்** : தேனுண்ட வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் என்பதுபோல எனக்கும் ஓசை இன்பத்துடன் பேசத் தெரிகிறது.

**எழில்** : இனியா உரைநடையில் என்னென்ன இலக்கிய வடிவங்கள் இருக்கின்றன?

**இனியன்** : சிறுகதை, புதினம், கட்டுரை....... ஆகியவை உரைநடை இலக்கிய வடிவங்களாகும்.

**எழில்** : ஆங்கில இலக்கியத்தில் அனாலஜி (Analogy) என்று ஒரு உத்தி இருக்கிறதே அது தமிழ் உரைநடையில் இருக்கிறதா?

**இனியன்** : நன்றாகக் கேட்டாய். ஒப்புமையை ஆங்கிலத்தில் அனாலஜி என்று கூறுகிறார்கள். இலக்கண நூலார் இதை எடுத்துக்காட்டு உவமையணி என்கின்றனர். உரைநடை உலகம் இதை இணை ஒப்பு என்கிறது. 'புரோகிதருக்காக அமாவசை காத்திருப்பதில்லை' என்பது இணை ஒப்பு.

**எழில்** : அருமை! தமிழ் இலக்கியங்களில் உயிரற்ற பொருட்களெல்லாம் பேசுமே! உரைநடையில் அப்படிப் பேசுமா?

**இனியன்** : ''சோலையில் புகுவேன் மரங்கள் கூப்பிடும் விருந்து வைக்கும்'' என்று அஃறிணைப் பொருட்கள் பேசுவதாக திரு.வி.க. எழுதுகிறார். உரைநடையிலும் அந்த உத்தியை பயன்படுத்துகிறோம்.

**எழில்** : இனியா! உணர்வுகளை வெளிப்படுத்த ஆங்கில இலக்கியவாதிகள் உவமை (Parable) என்ற உத்தியை பயன்படுத்துகின்றனர். அது தமிழ் உரைநடையில் உண்டா?

**இனியன்** : உணர்வுகளை வெளிப்படுத்த உவமை உருவகம் போற்ற உத்திகளைப் பயன்படுத்துகிறோம். கருத்திற்கு அழுத்தம் கொடுக்க சில புதிய உத்திகளையும் பயன்படுத்துகிறோம்.

''வாழ்க்கை நடத்துவதற்கு பொருள்பல வேண்டும்
அரிசி, காய், கனி முதலியவை வேண்டும்
உடை, வீடு முதலியவை வேண்டும்
காசும் காகித நோட்டும் வேண்டும்
இன்னும் பல வேண்டும்
இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்''

- என்று மு.வ. உரைநடையை அழகுபடுத்துகிறார்.

**எழில்** : மிகவும் இனிமையாக இருக்கிறது! இன்னும் வேறென்ன உத்திகள் உள்ளன?

**இனியன்** : எதிரிணை இசைவு என்று ஒரு உத்தி இருக்கிறது. சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை எதிரிணை இசைவு என்று கூறுவார்கள். தோழர் ஜீவானந்தம் கூறிய எதிரிணை இசைவு உத்தியைப் பார்ப்போமா?

''குடிசைகள் ஒருபக்கம் கோபுரங்கள் மறுபக்கம் பசித்த வயிறுகள் ஒருபக்கம் புளிச் சேப்பக்காரர்கள் மறுபக்கம் மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம் பருத்த தொந்திகள் மறுபக்கம் கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே சிந்தியுங்கள்''

**எழில்** : இனியா நீ உரைநடையின் சிறப்புகளைக் கூறக் கூற அதைப் படித்து இன்புற வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. நான் விரைவில் தமிழைப் படித்து தமிழின் இனிமையைச் சுவைக்கிறேன்.

**இனியன்** : மிக்க மகிழ்ச்சி எழில்.

### சுருக்கமான விடை

| | |
|---|---|
| **எழில்** | : இனியா! இனியா! |
| **இனியன்** | : வா! எழில் எப்போது வந்தாய்! நலமாக இருக்கிறாயா? |
| **எழில்** | : நான் நலம்! நீ நலமாக இருக்கிறாயா? |
| **இனியன்** | : நான் நலமாக இருக்கிறேன். |
| **எழில்** | : வீட்டில் நடப்பது கூட தெரியாமல் ஏதோ படித்துக்கொண்டு இருக்கிறாயே! |
| **இனியன்** | : நூல்களை வாசிக்கத் தொடங்கினால் என்னயே நான் மறந்துவிடுவேன் |
| **எழில்** | : என்ன நூலைப் படித்துக் கொண்டிருக்கிறாய் |
| **இனியன்** | : உரைநடையின் அணிநலன்கள் |
| **எழில்** | : உரைநடை என்றால் என்ன? |
| **இனியன்** | : பேசினால் உரையாடல் எழுதினால் உரைநடை |
| **எழில்** | : அப்படியா? அப்போ உரைநடை வடிவத்தில் எழுதுவது எளிது அப்படித்தானே! |
| **இனியன்** | : ஆமாம் எளிதுதான் ஆனால் இதிலும் சில நயங்களை இணைத்து எழுதும்போது அதன் சுவை கூடும். |
| **எழில்** | : உரைநடையில் என்னென்ன இலக்கிய வடிவங்கள் இருக்கின்றன? |
| **இனியன்** | : சிறுகதை, புதினம், கட்டுரை... ஆகியவை உரைநடை இலக்கிய வடிவங்கள் |
| **எழில்** | : உரைநடையில் கற்பனையாக எழுதுவது உண்டா? |
| **இனியன்** | : ஆமாம்! பேசாதன பேசுவதுபோல கற்பனை உரையாடல்கள் உண்டு. |
| **எழில்** | : ஏதாவது ஒரு உரையாடலைக் கூறு பார்ப்போம். |
| **இனியன்** | : ‘‘சோலையில் புகுவேன் மரங்கள் கூப்பிடும் விருந்து வைக்கும்’’ என்று திரு.வி.க. எழுதியுள்ளார். |
| **எழில்** | : அருமை, இன்னும் என்னென்ன உத்திகள் உள்ளன? |
| **இனியன்** | : இணை ஒப்பு, எதிரிணை இசைவு, இலக்கணை முரண்படு மெய்மை, உச்சநிலை என பல உத்திகள் உள்ளன. |
| **எழில்** | : உணர்ச்சிகளை வெளிக்காட்ட பயன்படும் உத்தி யாது? |
| **இனியன்** | : உவமை உருவகம் ஆகிய உத்திகளை உரைநடையிலும் பயன்படுத்துகின்றோம். |
| **எழில்** | : இனியா நீ உரைநடையின் சிறப்புகளைக் கூறக் கூற அதை படித்துச் சுவைக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. |
| **இனியன்** | : நான் வாசித்துக் காட்டட்டுமா? |
| **எழில்** | : வேண்டாம் இனியா. இந்த விடுமுறையில் நானே தமிழைக் கற்கப் போகிறேன். |
| **இனியன்** | : மிக்க மகிழ்ச்சி! |

## மொழியை ஆள்வோம்(பக்கம்.21)

### மொழிபெயர்ப்பு

1. **If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela** **(பெ.ஆ.க-2,செப்.2021)**
ஒருவன் புரிந்து கொள்ளும் மொழியில் பேசினால், அது அவனுடைய அறிவுக்குள் செல்லும். அவனுக்கு உரிய தாய்மொழியில் பேசினால் அது அவனுடைய இதயத்திற்குள் செல்லும்.

2. **Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going ? - Rita Mae Brown** **(பெ.ஆ.க-2,செப்.2021)**
மொழியானது பண்பாட்டுப் பாதையைக் காட்டும் வரைபடமாகும். மொழியானது மனிதன் எங்கிருந்து வந்தான், அவன் எங்கே செல்கிறான் என்பதையும் காட்டிவிடும்.

## சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

''தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதிகாறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே''
**(பெ.ஆ.க-5, மே-2022, ஜீன்.23)**

**''தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேறும் சிலப்பதிகாரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே''**

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் **(பெ.ஆ.க-4, அ.மா.தே)** | குவியல் | ஆடு **(பெ.ஆ.க-4)** | மந்தை |
| பழம் **(அ.மா.தே, ஜீன்.23)** | குலை | கீரை **(பெ.ஆ.க-4)** | கட்டு |
| புல் **(ஜீன்.23)** | கட்டு | மக்கள் **(பெ.ஆ.க-4)** | கூட்டம் |

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
   கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
   ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
   நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.

4. **பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
   பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

## தொடர்களில் உள்ள தடித்த சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசி**த்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.
   **புவியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழம்** இருக்கக் காய் **உண்ணு**தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசித் **துன்பப்**படுகின்றனர்.

2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து** மங்காப் **புகழ்** பெற்றான்.
   வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையைத் **தந்து** மங்காப் **பெருமை** பெற்றான்.

3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
   நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4. **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.
   **பூங்காவிற்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடித் **தேன்** உண்டன.

5. **பசு**ப்போல் **சாந்தமும்** **புலி**போல் **தீரமும்** **யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
   **ஆ**போல் **அமைதியும்** **வேங்கை** போல் **வலிமையும்** **வேழம்** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

பொருள்

| | |
|---|---|
| 1. உலகம் | புவி, அண்டம் |
| 2. மக்கள் | மனிதர் |
| 3. கனி | பழம் |
| 4. புசி | உண் |
| 5. இன்னல் | துன்பம் |
| 6. வறுமையால் | ஏழ்மையால் |
| 7. புலவன் | கவிஞன் |
| 8. கொடுத்து | தந்து |
| 9. புகழ் | பெருமை |
| 10. துணைவி | மனைவி |

| | |
|---|---|
| 11. முகில் | மேகம் |
| 12. மஞ்ஞை | மயில் |
| 13. களி | மகிழ்ச்சி |
| 14. சோலை | பூங்கா |
| 15. சுரும்புகள் | வண்டுகள் |
| 16. மது | தேன் |
| 17. பசு | ஆ |
| 18. சாந்தம் | பொறுமை, அமைதி |
| 19. புலி | வேங்கை |
| 20. யானை | வேழம் |

## கட்டுரை எழுதுக.

**குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ்ப்பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். (பெ.ஆ.க-1,அ.மா.தே)**

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**குறிப்புகள் :** முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை **(ஜீன்.23)**

### சான்றோர் வளர்த்த தமிழ்

**முன்னுரை:**

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய மூத்த மொழி''
''முதல் மாந்தன் பேசிய மொழி''
- நம் தாய்மொழியாம் தமிழ்மொழி.

அத்தகு சீர்மைமிகு தமிழ்மொழியை வளர்த்து வளர்ந்த சான்றோர்களைப் பற்றிக் காண்போம்.

**தமிழின் எல்லை:**

தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் முதல் தென்குமரிவரை எல்லையாகக் கொண்ட தமிழ்மொழி இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில் பேசப்படும் மொழியாக வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நாடுகளிலும் ஐந்து தமிழர் முதல் ஐந்து இலட்சம் தமிழர்வரை வாழ்ந்து தமிழை வளர்க்கின்றனர்.

**சங்கம் கண்ட தமிழ்:**

பாண்டியர்கள் சங்கம் வைத்து தமிழை வளர்த்தனர். சங்கப் பலகையில் அமர்ந்து சங்க இலக்கியம் படைத்துத் தந்த புலவர்கள் அனைவரும் தமிழ் வளர்த்த சான்றோர் பெருமக்களே. சங்கப் புலவர்களின் பாடல்களைத் தொகுத்தவர்களும், தொகுப்பித்தவர்களும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**நான்காம் தமிழ்ச்சங்கம்:**

முதல், இடை, கடைச் சங்கங்கள் கடற்கோளால் அழிந்த பின்னர் பரிதிமாற் கலைஞர், உ.வே.சா. , இராகவனார், பாசுகர சேதுபதி, பாண்டித்துரைத்தேவர் ஆகியோர் நான்காம் தமிழ்ச் சங்கத்தை அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

**வள்ளுவரும் ஔவையும்:**

ஓரடியில் ஆத்திச்சூடி தந்த ஔவையும் ஈரடியில் உலகப் பொதுமறையைத் தந்த வள்ளுவரும் தமிழ் மொழியை வளர்த்தவர்களே.

**சிற்றிலக்கியங்கள் தந்த சான்றோர்:**

பரணி பாடிய செயங்கொண்டாரும், உலா பாடிய ஒட்டக்கூத்தரும், குறவஞ்சி பாடிய திரிகூடராசப்ப கவிராயரும், தூது பிள்ளைத்தமிழ், பள்ளு போன்ற 96 வகை சிற்றிலக்கியங்களையும் தமிழுக்கு வழங்கி, தமிழ்மொழியை வளரச் செய்த புலவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**தமிழை ஆதரித்த வள்ளல்கள்:**

தான் வீழ்ந்தாலும் கவலை இல்லை. தமிழ் வாழட்டும் என நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்த அதியனும் ஏழைப்புலவனுக்காகத் தன் தலையைக் கொடுத்த குமணனும் தமிழ் வளர்த்த வள்ளல்களும் மன்னர்களும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**தமிழ் வளர்த்த பிறநாட்டார்:**

தமிழின் சிறப்புகளை மொழிபெயர்ப்பின் மூலம் உலகறியச் செய்த ஜி.யு.போப்பும் சதுரகராதியைத் தந்த வீரமாமுனிவரும் தமிழ் வளர்த்த சான்றோரே.

**மொழிப் பற்றாளர்:**

நம் பழம்பெரும் இலக்கியங்களையெல்லாம் திருத்தமாகப் பதிப்பித்து தமிழர் கைகளில் தவழச் செய்தஉ.வே.சா, தமது பேச்சாலும் எழுத்தாலும் தனித்தமிழ் உணர்வை வளர்த்த மறைமலை அடிகளார், குழந்தை இலக்கியம் வளர்த்த கவிமணி, தமிழ் நடையை வளர்த்த தமிழ்த்தென்றல் திரு.வி.க., நமக்குத் தொழில் கவிதை என்ற பாரதி, புதுவை தந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, உரைநடை இலக்கியம் வளர்த்த மு.வ., தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்த பரிதிமாற்கலைஞர் ஆகியோரும் இந்தித் திணிப்புப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்களும் இனிமேலும் தமிழ் வளர்க்கும் சான்றோர்களும், தமிழ் வளர்த்த சான்றோர்களே.

**முடிவுரை:**

குமரிக் கண்டத்தில் தோன்றி உலகமெலாம் பரவித் தன் புகழை நிலைநாட்டி வளர்ந்துவரும் தமிழ்மொழியைப் பேசிவரும் ஒவ்வொருவரும் தமிழ் வளர்த்த சான்றோரே. எனவே, அனைவரும் தூய தமிழில் பேசுவோம்; தமிழ்மொழியை வளர்ப்போம்.

---

## நயம் பாராட்டுக.

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே**

**- கா.நமச்சிவாயர்**

**முன்னுரை:**

தமிழகத்தின் சிறந்த புலவராக, தமிழறிஞராக விளங்கிய தமிழ்ப்பேராசிரியர் கா.நமச்சிவாயர் தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமக்களுள் ஒருவர். அவர் எழுதிய இனிய கவிதையின் நயத்தினைப் பின்வருமாறு காண்போம்.

**பாடலின் திரண்ட கருத்து:**

**வாழைக்குக் குருத்து அழகு**
**கவிதைக்குக் கருத்து அழகு**

- ☑ தேனைவிட மிக இனிமையான நல்ல செந்தமிழ் மொழியே!
- ☑ தென்னாடு நன்கு விளக்கமுறத்திகழ்ந்த தென்மொழியே!
- ☑ எங்கள் உடம்பிலும் ஒளிரும் ஒண்மைத் தமிழே!
- ☑ வானைவிட ஓங்கி உயர்ந்த வளமை கொண்ட தமிழே!
- ☑ மனிதர்க்கு இரு கண்ணாக விளங்கும் நலமிக்க மொழியே!
- ☑ தனக்கெனத் தனிச் சிறப்பிடம் பெற்ற தனித்தமிழ் மொழியே!
- ☑ தழைத்து இனிது ஓங்குவாய்த் தண்டமிழே! எனத் தமிழைப் போற்றிப் பாடியுள்ளார்.

**மையக் கருத்து:**

தென்னாட்டில் திகழ்ந்த, தேனைவிட உயர்ந்த, ஊனில் கலந்த, வானைவிட உயர்ந்த, மனிதர்க்கு இரு கண்ணாய் விளங்கும், தன்னிகரில்லாத் தமிழ் இனிது ஓங்குக என்று மகிழ்ந்து பாடுகிறார்.

**தொடை நயம்:**

**''தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்'' என்பர்**

**மோனைத் தொடை:**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே

போன்ற மோனைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**எதுகைத் தொடை:**

செய்யுளில் ஒவ்வோர் அடியிலும் அல்லது சீரிலும் முதலெழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

தேனினும்
ஊனினும்

போன்ற எதுகைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக விளங்குகின்றன.

**இயைபுத் தொடை:**

செய்யுளில் ஒவ்வொரு அடியிலும் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

தேனினும்..... **மொழியே!**
ஊனினும்..... **மொழியே!**
வானினும்..... **மொழியே!**
தானனி..... **மொழியே!**

போன்ற இயைபுச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளன.

**அணி நயம்:**

**''ஆண்மகனுக்குப் பணி அழகு**
**கவி மகளுக்கு அணி அழகு'' என்பதற்கேற்ப**

இப்பாடலில் **'உயர்வு நவிற்சியணி'** பயின்று வந்துள்ளது.

**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**

என்னும் பாடல் வரியில் உயர்வு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

**சொல் நயம்:**

**''விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு'' என்பர்**

''வானினும் ஓங்கிய வண்டமிழ்'' இத்தொடரில் வளமை என்னும் பொருளில் வந்துள்ள இச்சொல், சொல்நயம் மிக்கதாக உள்ளது.

**பொருள் நயம்:**

**''காருக்கு இருள் அழகு**
**கவிதைக்குப் பொருள் அழகு'' என்பர்**

**ஊனினும் ஒளிர்வுறும்** இத்தொடரில் அருமையான, ஆழமான கருத்து பொதிந்துள்ளது. உடம்பாக, உடம்பில் ஒளிரும் தன்மையாக எனும் பொருள் வரும் இவ்வரி அருமையிலும் அருமை.

**சந்த நயம்:**

**''யானைக்குத் தந்தம் அழகு**
**கவிதைக்குச் சந்தம் அழகு'' என்பர்**

**''செந்தமிழ் மொழியே! ஒண்டமிழ் மொழியே! வண்டமிழ் மொழியே! தண்டமிழ் மொழியே!** என்னும் தொடர்கள் படிப்பதற்கு ஓசை நயமிக்கதாக உள்ளது.

இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியப்பா வகையில் இயற்றப்பட்டுள்ளதால், ஆசிரியப்பாவிற்குரிய **அகவல் ஓசை** பயின்று வந்து சந்த நயமிக்கதாக உள்ளது.

**சுவை நயம்:**

**''உணவிற்கு அறுசுவை**
**கவிதைக்கு அருமை சுவை'' என்பர்**

தமிழைப் பெருமைப்படுத்திப் பாடியுள்ளமையால் இப்பாடலில் **''பெருமிதச்சுவை''** பயின்று வந்துள்ளது.

**தலைப்பு:**

தனித்தமிழே! தாயே!

**முடிவுரை:**

**நாட்டிற்கு நல்லுரை வேண்டும்**
**செய்யுளுக்கு முடிவுரை வேண்டும்**

தமிழ் ஆர்வமிக்கக் கவிஞர்களால் தான் தமிழ் தழைத்து இனிது வளர்ந்து நிற்கின்றது. கா.நமச்சிவாயர் போல் கவிதையை மணி மணியாய் வடிப்பவர் யார்? மணியாய் வடித்த கவிதையை நாமும் அணியாய் எடுத்துத் தமிழ் மகளுக்கு அணிவிப்போமாக!

## மொழியோடு விளையாடு (பக்கம்.23)

### சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

தேன் **(பெ.ஆ.க-1,செப்.2021)**, விளக்கு, மழை **(பெ.ஆ.க-1,செப்.2021)**, விண் **(செப்.2021)**, மணி **(பெ.ஆ.க-1, செப்.2021)**, விலங்கு, செய், மேகலை **(பெ.ஆ.க-1,செப்.2021)**, வான், பொன், பூ **(செப்.2021)**

எ.கா. பூமணி

| | | |
|---|---|---|
| ✓ தேன்மழை | ✓ பொன் விலங்கு | ✓ வான் மழை |
| ✓ விண் விளக்கு | ✓ செய்வான் | ✓ பொன் விளக்கு |
| ✓ பொன் மணி | ✓ மணிமேகலை | ✓ பூமழை |

### குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச்சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறை நாள்.

(எ.கா) குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?

- ✓ மனிதன் **சுவைக்காத இளநீர்** என்று உலகில் ஒன்று உண்டா? **(மார்ச்.24)**
- ✓ **காப்பியச் சுவை**யில் இன்புறாத இலக்கிய ஆர்வலர்களும் உண்டோ?
- ✓ **மனிதகுல மேன்மை**யைப் பற்றிச் சொல்லாத இலக்கியமும் உண்டா?
- ✓ கல்வி இல்லாமல் **மனிதகுலம் மேன்மை** அடையுமா?/ கல்வி இல்லாமல் **மனிதகுலத்திற்கு மேன்மை** உண்டா?
- ✓ மாணவருக்கு இன்பத்தைத் தராத **விடுமுறை நாளும்** உண்டா? **(மார்ச்.24)**

## எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.


| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | **எட்டு** | அ |
| ஐந்து சால்பு ஊன்றிய தூண் | **ஐந்து** | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | **நான்கு, இரண்டு** | **ச/ உ** |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | **ஆயிரம்** | க000 |

## அகராதியில் காண்க.

1. **அடவி** - காடு
2. **அவல்** - பள்ளமான நிலம்
3. **சுவல்** - மேடான நிலம்
4. **செறு** -வயல், பகை, பாத்தி
5. **பழனம்** - வயல்
6. **புறவு** - முல்லை நிலம்,தோட்டம், புறா

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(பெ.ஆ.க-1)**



அறிவு எனும் பூட்டைத் திறக்க

நல்ல புத்தகம் என்ற சாவி தேவை.

பூட்டிய அறிவின் திறவுகோல்

கல்வியே ஆகும்.

## நிற்க அதற்குத் தக.

| **இன்சொல் வழி** | **தீய சொல் வழி** |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?
**நாங்கள் செல்லும் வழி இன்சொல் வழி.**
**எங்கள் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி**

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| **Vowel** | உயிரெழுத்து **(பெ.ஆ.க-1, ஆகஸ்ட்.22, ஜீன்.23)** |
| **Monolingual** | ஒரு மொழி |
| **Homograph** | ஒப்பெழுத்து **(பெ.ஆ.க-1)** |

| | |
|---|---|
| **Consonant** | மெய்யெழுத்து |
| **Conversation** | உரையாடல் |
| **Discussion** | கலந்துரையாடல் **(ஆகஸ்ட்.22)** |

# மொழி க

கவிதைப் பேழை

## அன்னை மொழியே

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3EGD9S

### பலவுள் தெரிக.

1. **கல்போன்ற மனதையும் கற்கண்டாக்குபவள் யார்?**
அ) தமிழ்த்தாய் ஆ) பெற்றதாய்
இ) செவிலித்தாய் ஈ) நற்றாய்
**[அ) தமிழ்த்தாய்]**

2. **பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனச்சுட்டப்படுபவை எவை? எவை?**
அ) திருக்குறளும், நாலடியாரும்
ஆ) பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்
இ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்
ஈ) மகாபாரதமும் கம்பராமாயணமும்
**[ஆ) பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்]**

3. **அன்னை மொழியே எனும் பாடலில் சுட்டப்படும் உவமைத் தொடரைக் கண்டறிக.**
அ) செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அதுபோல
ஆ) எண்தொகையே! நற்கணக்கே! மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!
இ) முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
ஈ) உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
**[அ) செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த அந்தும்பி பாடும் அதுபோல]**

4. **சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்று பாடியவர் யார்?**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஔவையார்
இ) பாரதியார் ஈ) க.சச்சிதானந்தன்
**[ஈ) க.சச்சிதானந்தன்]**

5. **பொருந்தாத கூற்றைக் கண்டறிக.**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம் ஆகும்.
ஆ) நம் பாடப்பகுதியில் உள்ள அன்னை மொழியே எனும் பாடல் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
இ) பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது.
ஈ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு எனும் நூல்களைப் படைத்துள்ளார்.
**[ஈ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு எனும் நூல்களைப் படைத்துள்ளார்]**

6. **அன்னை மொழியே - கவிதை இடம்பெற்றுள்ள நூல்**
அ) தமிழ்ச்சிட்டு ஆ) நூறாசிரியம்
இ) கனிச்சாறு ஈ) தமிழ் வாழ்த்து
**[இ) கனிச்சாறு]**

7. **தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின் நூல் எது?**
அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
ஆ) பள்ளிப்பறவைகள்
இ) எண்சுவை எண்பது ஈ) நூறாசிரியம்
**[அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை]**

8. **‘தென்னன் மகளே’ - இதிலுள்ள தென்னன் யார்?**
அ) சேரன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) பல்லவன்
**[இ) பாண்டியன்]**

9. **‘செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த ----- பாடும்.**
அ) குயில் ஆ) தமிழ் இ) தும்பி ஈ) காகம்
**[இ) தும்பி]**

10. **கூற்றுகளை ஆராய்க.**
**கூற்று 1** : பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை மாணிக்கம்
**கூற்று 2** : பெருஞ்சித்திரனாரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1, 2 தவறு

**[அ) கூற்று 1, 2 சரி]**

11. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதிய நூல் அல்லாதது**
அ) உலகியல் நூறு ஆ) நூறாசிரியம்
இ) தமிழ்ச்சிட்டு ஈ) பள்ளிப் பறவைகள்

**[இ) தமிழ்ச்சிட்டு]**

12. **துரை.மாணிக்கம் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பக் காரணமாக இருந்த இதழ்**
அ) தென்மொழி ஆ) கனிச்சாறு
இ) மகபுகுவஞ்சி ஈ) நூறாசிரியம்

**[அ) தென்மொழி]**

13. **'கன்னிக்குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில் மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!' - இத்தொடரில் அமைந்த நயம்**
அ) எதுகை, மோனை ஆ) மோனை, இயைபு
இ) இயைபு, முரண் ஈ) முரண், எதுகை

**[அ) எதுகை, மோனை]**

14. **'இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே' - இத்தொடரில் சுட்டப்பெறும் நூல்களின் மொத்த எண்ணிக்கை**
அ) 19 ஆ) 36 இ) 46 ஈ) 56

**[ஆ) 36]**

15. **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் யாது?**
அ) துரைக்கண்ணு ஆ) துரை சித்திரனார்
இ) துரை மாணிக்கம் ஈ) துரை ராசு

**[இ) துரை மாணிக்கம்]**

16. **கடல் கொண்ட கண்டம் எது?**
அ) ஆசியக் கண்டம் ஆ) ஆப்பிரிக்கக் கண்டம்
இ) ஐரோப்பாக் கண்டம் ஈ) குமரிக் கண்டம்

**[ஈ) குமரிக் கண்டம்]**

17. **பாண்டிய மன்னனின் மகளாகக் குறிப்பிடப்படுபவர் யார்?**
அ) கன்னிக்குமரி ஆ) மணிமேகலை
இ) தமிழ்மொழி ஈ) தும்பி

**[இ) தமிழ்மொழி]**

18. **நற்கணக்கே என்னும் தொடர் உணர்த்தும் நூல்களின் எண்ணிக்கை?**
அ) 10 ஆ) 8 இ) 18 ஈ) 96

**[இ) 18]**

## இலக்கணக் குறிப்பு தருக.

1. **செந்தமிழே! அன்னையே! மொழியே!** - விளித்தொடர்
2. **செந்தாமரை** - பண்புத்தொகை
3. **வாழ்த்துவமே** - தன்மைப் பன்மை வினைமுற்று
4. **இலக்கியமும் புகழுரையும்** -எண்ணும்மை

## பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**முகிழ்த்த** - முகிழ் + த் + த் + அ
**முகிழ்** - பகுதி
**த்** - சந்தி
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி தருக.

**செந்தாமரை** -செம்மை + தாமரை
**ஈறுபோதல்** -செம்மை + தாமரை ('மை' விகுதி கெடல்)
**முன்னின்ற மெய் திரிதல்** -செந்தாமரை ('ம்' 'ந்' ஆகத் திரிதல்)

## குறுவினா

1. **'பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!' - இத்தொடரில் சுட்டப்பெறும் நூல்கள் யாவை?**
   - பாப்பத்தே - பத்துப்பாட்டு
   - எண்தொகையே - எட்டுத்தொகை
   - நற்கணக்கே - பதினெண்கீழ்க்கணக்கு

2. **பெருஞ்சித்திரனார் தமிழ் உணர்வைப் பரப்ப நடத்திய இதழ்கள் யாவை?**
   - தென்மொழி
   - தமிழ்ச்சிட்டு

3. **பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களை எழுதுக.**
   - உலகியல் நூறு
   - பாவியக்கொத்து
   - நூறாசிரியம்
   - கனிச்சாறு
   - எண்சுவை எண்பது
   - மகபுகுவஞ்சி
   - பள்ளிப்பறவைகள்
   - திருக்குறள் மெய்ப்பொருளுரை

## சிறுவினா

1. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.**
   - பாவலரேறு பெருஞ்சித்திரனார் 10-03-1933 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் என்னும் ஊரில் துரைசாமி-குஞ்சம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.
   - இவருக்குப் பெற்றோர் 'துரை மாணிக்கம்' என்று பெயர் சூட்டினர்.
   - இவர் கமலம் என்ற தாமரையம்மையாரை மணம் முடித்துக் கொண்டார்.
   - இவர் அஞ்சல் துறை உதவியாளராகப் புதுவையில் தனது பணியைத் தொடங்கினார்.
   - இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி , பள்ளிப்பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.
   - இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.
   - இவர் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்.
   - இவர் உடல் நலக்குறைவால் 11-06-1995-ல் காலமானார்.
   - இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின் (பக்கம்.3)

**''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை''**

**- இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க் காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

**நற்றிணை:**
- நற்றிணை அகத்திணை இலக்கியமாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 192.
- இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை; தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி;
- இதன் அடி வரையறை 9 அடி முதல் 12 அடி வரை.
- இது அகவற்பாவால் ஆனது.

**குறுந்தொகை:**
- குறுந்தொகை அகத்திணை இலக்கியம்.
- பாடல்களின் எண்ணிக்கை 402.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 205.
- அடிவரையறை 4 அடி முதல் 8 அடி வரை.
- இதைத் தொகுத்தவர் பூரிக்கோ.
- தொகுப்பித்தவர் யாரெனத் தெரியவில்லை.

**ஐங்குறுநூறு:**
- ஐங்குறுநூறு அகப்பொருள் இலக்கியம்.
- பாடல்களின் எண்ணிக்கை 500.
- திணைக்கு நூறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு திணையும் பத்துப்பத்தாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- அடிவரையறை மூன்று அடி முதல் 6 அடி வரை.
- பாடியோர் குறிஞ்சி- கபிலர், முல்லை- பேயனார், மருதம்- ஓரம்போகியார், நெய்தல்- அம்மூவனார், பாலை- ஓதலாந்தையார்.

- தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை.

**பதிற்றுப்பத்து:**

- பதிற்றுப்பத்து புறப்பொருள் பற்றிய தொகை நூல் புறநானூறு போல மூவேந்தர்களையும் குறுநிலமன்னர்களையும் பாடாமல் சேர மன்னர்களைப் பற்றியே பாடிய தொகை நூல்.
- ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப்பாடல்கள் வீதம் பத்துச் சேரமன்னர்களைப் பற்றி வெவ்வேறு புலவர்கள் பாடியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.
- முதல் பத்தும் இறுதிப்பத்தும் இன்று வரை கிடைக்கவில்லை. எஞ்சிய எட்டுப்பத்தில் உள்ள 80 பாடல்கள் கிடைத்துள்ளன.

**பரிபாடல்:**

- பரிபாடல் என்பது பாவகைகளில் ஒன்றாகும்.
- தொல்காப்பியர் பரிபாட்டு அகப்பொருளில் வரும் என்று குறிப்பிடுகிறார்.
- பாவகையால் பெயர் பெற்ற நூல் அகத்திற்கும், புறத்திற்கும் உரிய நூல்.
- இது இசைப்பாடலாகும்.
- இது பாண்டிய மன்னர்களைச் சிறப்பித்துக் கூறுகிறது.
- ‘ஓங்கு பரிபாடல்’ என்று சிறப்பிக்கப்படுகிறது.
- இறையனார் களவியல் உரைமூலம் 70 பாடல்கள் உண்டு என அறிய முடிகிறது. ஆனால் 24 பாடல்களே கிடைத்துள்ளன.
- பரிபாடலைப் பாடிய புலவர்கள் 13 பேர்.

**கலித்தொகை:**

- கலித்தொகை அகப்பொருள் நூலாகும்.
- கலிப்பாவால் ஆனது.
- 150 பாடல்களைக் கொண்டது.
- பாலை, குறிஞ்சி , மருதம், முல்லை, நெய்தல் என்ற வரிசையில் அமைந்துள்ளது.
- இதைத் தொகுத்தவர் நல்லந்துவனார்.
- பாடிய புலவர்கள் பாலை- பெருங்கடுங்கோன், குறிஞ்சி- கபிலர், மருதம்- இளநாகனார், முல்லை- சோழன் நல்லுருத்திரன், நெய்தல்- நல்லந்துவனார்

**அகநானூறு:**

- அகநானூறு அகப்பொருள் நூலாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 145.
- தொகுத்தவர் உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார்.
- தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.
- அடிவரையறை 13 அடி முதல் 31 அடி வரை.
- நீண்ட பாடல்களைப் பெற்றிருப்பதால் ‘நெடுந்தொகை’ என்ற பெயரும் உண்டு.

**புறநானூறு:**

- புறநானூறு புறப்பொருள் இலக்கியமாகும்.
- பாடல்களின் எண்ணிக்கை 400.
- பாடிய புலவர்களின் எண்ணிக்கை 158.
- அகவற்பாவால் ஆனது.
- புறநானூற்றில் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.
- உழிஞைத் திணைக்குரிய பாடல்கள் இல்லை.

உரைநடை உலகம்

மொழி

க

# தமிழ்ச்சொல் வளம்

– தேவநேயப் பாவாணர்

3TZ8B4

## பலவுள் தெரிக.

1. **‘விழிகளை இழக்க நேரிட்டால் கூடத் தாய்த்தமிழினை இழந்துவிடக் கூடாது’ என்று எண்ணியவர்**

அ) திரு.வி.க. ஆ) பாவாணர்

இ) இரா. இளங்குமரனார் ஈ) கவிமணி

**[இ) இரா. இளங்குமரனார்]**

2. **பொருத்துக.**
1. தாள் - அ) நெட்டி, மிளகாய்ச்செடி
2. கோல் - ஆ) புளி, வேம்பு
3. தட்டு - இ) நெல், கேழ்வரகு
4. அடி - ஈ) கம்பு, சோளம்

அ) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ
ஆ) 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ
இ) 1-ஈ, 2-அ, 3-ஆ, 4-இ
ஈ) 1-ஆ, 2-அ, 3-இ, 7-ஈ

**[அ) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ]**

3. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) கவை - அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
ஆ) கொப்பு - கவையின் பிரிவு; கிளை - கொப்பின் பிரிவு
இ) போத்து - கிளையின் பிரிவு; சினை - போத்தின் பிரிவு
ஈ) குச்சு - போத்தின் பிரிவு; இணுக்கு - குச்சியின் பிரிவு

**[இ)போத்து - கிளையின் பிரிவு; சினை - போத்தின் பிரிவு]**

4. **திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள ஊர்**
அ) திருச்சி ஆ) அல்லூர்
இ) மயிலாப்பூர் ஈ) திருவாரூர்

**[ஆ) அல்லூர்]**

5. **காய்ந்த குச்சு - காய்ந்த சிறுகிளை இவ்வாறு அழைக்கப்படுகின்றன.**
அ) வெங்கழி, விறகு ஆ) கட்டை, விறகு
இ) சுள்ளி, விறகு ஈ) குச்சு, இணுக்கு

**[இ) சுள்ளி, விறகு]**

6. **சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து**
அ) கொழுந்தாடை ஆ) துளிர்
இ) குருத்து ஈ) கதிர் **[இ) குருத்து]**

7. **கீழ்வருவனவற்றுள் இளங்குமரனார் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது?**
அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்
ஆ) பாவாணர் கோட்டம் ஒன்றை உருவாக்கியவர்
இ) தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்
ஈ) திருவள்ளுவர் தவச்சாலை அமைத்தவர்.

**[ஆ) பாவாணர் கோட்டம் ஒன்றை உருவாக்கியவர்]**

8. **மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை**
அ) வீ ஆ) செம்மல் இ) அலர் ஈ) மலர் **[அ) வீ]**

9. **'தமிழ்ச்சொல்வளம்' என்னும் கட்டுரை இடம் பெற்ற நூல்**
அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்
ஆ) சொற்பிறப்பியல் அகராதி
இ) சொல்லாராய்ச்சி வரலாறு
ஈ) செஞ்சொல் மாலை

**[அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்]**

10. **பொருத்துக.**
1. கொத்து - அ) கொடி முந்திரி
2. குலை - ஆ) நெல், தினை
3. கதிர் - இ) அவரை, துவரை
4. குரல் - ஈ) கேழ்வரகு, சோளம்

i) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ
ii) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ
iii) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ
iv) 1-ஈ, 2-ஆ, 3-அ, 4-இ

**[ii) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ]**

11. **சம்பாவில் மட்டும் ----- வகையான நெல்கள் உள்ளன.**
அ) நாற்பது ஆ) ஐம்பது
இ) அறுபது ஈ) எழுபது **[இ) அறுபது]**

12. **பொருத்தமற்றதைக் கண்டறிக.**
அ) நெல், கத்திரியின் இளநிலை- நாற்று
ஆ) தென்னையின் இளநிலை- குருத்து
இ) மா, புளியின் இளநிலை-கன்று
ஈ) விளாவின் இளநிலை- குட்டி

**[ஆ) தென்னையின் இளநிலை- குருத்து]**

13. **குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்**
அ) அளியல் ஆ) சிவியல்
இ) அழுகல் ஈ) சொண்டு **[இ) அழுகல்]**

14. **தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்**
அ) அல்லிக்காய் ஆ) தேரைக்காய்
இ) ஒல்லிக்காய் ஈ) கூகைக்காய்

**[அ) அல்லிக்காய்]**

15. **உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர்**
அ) அப்பாதுரையார் ஆ) பாவாணர்
இ) இளங்குமரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

**[ஆ) பாவாணர்]**

16. 1554-இல் ---- என்னும் நூல் முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
அ) கார்டிலா ஆ) ரோமன்
இ) கோர்டியாலா ஈ) பாப்பேஜ் **[அ) கார்டிலா]**

17. 'பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள' - என்று கூறியவர்
அ) இளங்குமரனார் ஆ) பாவாணர்
இ) கால்டுவெல் ஈ) ஜி.யு.போப்
**[இ) கால்டுவெல்]**

18. காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட மொழி
அ) தமிழ் ஆ) வடமொழி
இ) தெலுங்கு ஈ) மலையாளம் **[அ) தமிழ்]**

19. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர் யார்?
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஔவையார் இ) பாரதியார்
ஈ) க.சச்சிதானந்தன் **[இ) பாரதியார்]**

20. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் ''திருவள்ளுவர் தவச்சாலை ஒன்றை'' அமைத்திருப்பவர் யார்?
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) ஔவையார்
இ) பாரதியார்
ஈ) தமிழ்த்திரு. இரா.இளங்குமரனார்
**[ஈ) தமிழ்த்திரு. இரா.இளங்குமரனார்]**

21. பொருத்துக.
அ) சுள்ளி - 1. காய்ந்த தாளும் தோகையும்
ஆ) சொண்டு - 2. பதராய்ப்போன மிளகாய்
இ) வடலி - 3. காய்ந்த குச்சு
ஈ) சண்டு - 4. பனையின் இளநிலை
அ) 1, 3, 4, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 2, 3, 4, 1 ஈ) 3, 2, 4, 1 **[ஈ) 3, 2, 4, 1]**

22. பொருத்துக.
அ) பிஞ்சு - 1. குச்சியின் பிரிவு
ஆ) சூம்பல் - 2. வேம்பு, ஆமணக்கு ஆகியவற்றின் வித்து
இ) முத்து - 3. இளம் காய்
ஈ) இணுக்கு - 4. நுனியில் சுருங்கிய காய்
அ) 1, 3, 4, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 3, 4, 2, 1 ஈ) 3, 2, 4, 1 **[இ) 3, 4, 2, 1]**

23. பொருந்தாத இணையைக் கண்டறிக:
அ) பைங்கூழ் - நெல் சோளம் முதலியவற்றின் பசும் பயிர்
ஆ) கன்று - மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை
இ) அளியல் - குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
ஈ) அழுகல் - குளுகுளுத்த பழம்
அ) அ, ஆ ஆ) இ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, ஈ
**[ஆ) இ, ஈ]**

24. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) கொப்பு, சினை, போத்து, கவை - தாவரங்களின் கிளைப் பிரிவுகள்
ஆ) தாள், தோகை, ஓலை, சண்டு - தாவரங்களின் இலைவகைகளைக் குறிக்கும்
இ) கொத்து, தாறு, கதிர், குரல் - தானியங்களுக்கு வழங்கும் பெயர்கள்
ஈ) தொலி, ஓடு, மட்டை, தோடு - பழத்தோலின் மேல்பகுதியினைக் குறிக்கும்
**[இ) கொத்து, தாறு, கதிர், குரல் - தானியங்களுக்கு வழங்கும் பெயர்கள்]**

25. **கூற்று** : திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியே.
**காரணம்** : மொழியே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்குச் சிறந்த வழியாகும்.
அ) கூற்று சரி ஆ) காரணம் சரி
இ) கூற்று, காரணம் தவறு ஈ) கூற்று, காரணம் சரி
**[ஈ) கூற்று, காரணம் சரி]**

26. சரியான நிறுத்தற்குறியினைக் கண்டறிக.
அ) ''தமிழாசிரியர்'' நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
ஆ) தமிழாசிரியர், நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
இ) தமிழாசிரியர், 'நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்', சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
ஈ) தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.
**[ஈ) தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.]**

## குறுவினா

**1. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலை உடையவர் யார்? அவர் போலவே எழுதக் கற்றுக் கொண்டவர் யார்?**

- இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலை உடையவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆவார்.
- அவர்போலவே எழுதக் கற்றுக் கொண்டவர், தமிழ்த்திரு இரா.இளங்குமரனார் ஆவார்.

**2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதியவர் யார்?**

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதியவர் கால்டுவெல்

**3. பாவாணர், தமிழ்ச் சொல்வளம் கட்டுரையில் குறிப்பிடப்படும் சொல்வகைகளைக் குறிப்பிடுக.**

- வேர்வகை, வித்துவகை, அரிதாள்வகை, காய்ந்த இலைவகை, பூமடல்வகை, அரும்புவகை, பயிர் வகை, கொடிவகை, விதைத்தோல் வகை இன்னபலவும் குறிப்பிடுகிறார்.

**4. உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர் யார்?**

- மொழி ஞாயிறு என்று அழைக்கப்படும் தேவநேயப்பாவாணர்.

**5. முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது? அந்நூல் எந்த வடிவில் அச்சிடப்பட்டிருந்தது?**

- போர்ச்சுக்கீசு நாட்டின்கார்டிலா எனும் நூல் 1554-ல் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- அந்நூல் ரோமன் வரி வடிவத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

**6. தமிழ்நாட்டு நெல் வகைகளைக் குறிப்பிடுக.**

- செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா நெல், மட்டை நெல் முதலிய நெல்வகைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

**7. தமிழின் சிறப்பு குறித்துக் கால்டுவெல் கூறுவன யாவை? (அ) தமிழ்ச்சொல்வளம் குறித்துக் கால்டுவெல் கூறுவன யாவை?**

- 'தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றிப் பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள' என்கிறார் கால்டுவெல்.

**8. சம்பா நெல்வகைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

- ஆவிரம் பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச் சம்பா எனச் சம்பாவில் அறுபது உள்வகைகள் உள்ளன.

**9. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

- இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு முதலியன தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களாகும்.

**10. இரா.இளங்குமரனார் எழுதிய நூல்கள் யாவை?**

- இரா.இளங்குமரனார் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலான நூல்களை எழுதியுள்ளார்.

**11. கெட்டுப்போன கனிகளுக்கு வழங்கப்படும் பெயர்கள் யாவை?**

- சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல் என்பவை கெட்டுப்போன கனிகளுக்கு வழங்கப்படும் பெயர்களாகும்.

**12. சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்களுக்கே இயலும் செயல் யாது?**

- பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருள் சொற்களும் அமைத்துக் கொள்வது சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும் செயலாகும்.

## சிறுவினா

1. **தாவரங்களின் பிஞ்சு வகைகள், குலை வகைகள் குறித்து விளக்குக.**

**தாவரத்தின் பிஞ்சு வகை:**

- பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு; பிஞ்சு - இளங்காய்; வடு - மாம்பிஞ்சு; மூசு - பலாப்பிஞ்சு; கவ்வை - எள்பிஞ்சு; குரும்பை - தென்னை, பனையின் இளம்பிஞ்சு; கச்சல் - வாழைப்பிஞ்சு; நுழாய் - இளம்பாக்கு.

**தாவரத்தின் குலை வகை:**

- கொத்து - அவரை, துவரையின் குலை; தாறு - வாழைக்குலை; கதிர் - கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்; குரல் - நெல், தினையின் கதிர்; சீப்பு - வாழைத்தாற்றின் பகுதி.

2. **தாவரங்களின் இலை வகை, கொழுந்து வகை குறித்து விளக்குக.**

**இலை வகை:**

- இலை - புளி, வேம்பு முதலியவற்றின் இலை; தாள் - நெல், புல்லின் இலை; தோகை- சோளம், கரும்பின் இலை; ஓலை - தென்னை, பனையின் இலை; சருகு - காய்ந்த இலை.

**கொழுந்து வகை:**

- தளிர் - நெல், புல்லின் கொழுந்து; முறி - புளி, வேம்பின் கொழுந்து; குருத்து - சோளம், கரும்பு, தென்னை, பனையின் கொழுந்து; கொழுந்தாடை - கரும்பின் நுனி.

## கற்பவை கற்றபின்(பக்கம்.8)

1. **பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

தரிசு - மழையில்லாமல் விளைச்சல் குன்றிய நன்செய் நிலம்.
சிவல் - செந்நிலம் / செம்மண் நிலம்
கரிசல் -கரிசல்மண் நிலம்
முரம்பு - கல்லுள்ள மேட்டு நிலம்
புறம்போக்கு - ஊர்ப்புறத்தில் குடிகள் வாழ்தல் இல்லாத நிலப்பகுதி
சுவல் - மேடான நிலப்பகுதி
அவல் - பள்ளமான நிலப்பகுதி

2. **ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

**எ.கா: சொல்லுதல் - பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்.**

அழகு - அணி, வனப்பு, பொலிவு, எழில், கவின்
அம்பு - கணை, சரம், பாணம், வாளி
அரசன் - கோ, வேந்தன், மன்னன், கொற்றவன்

மொழி க

கவிதைப் பேழை

# இரட்டுற மொழிதல்

*– சந்தக்கவிமணி தமிழழகனார்*

4NS2C4

## பலவுள் தெரிக.

1. **இரட்டுற மொழிதல் அணியின் வேறுபெயர்**
அ) உருவகம் ஆ) சிலேடை
இ) பிறிதுமொழிதல் ஈ) பின்வருநிலை
**[ஆ) சிலேடை]**

2. **தமிழழகனார் படைத்த சிற்றிலக்கிய நூல்கள்**
அ) 12 ஆ) 16 இ) 18 ஈ) 20 **[அ) 12]**

3. **தமிழழகனாரின் சிறப்புப் பெயர்**

அ) பாவலரேறு ஆ) சண்முகசுந்தரம்

இ) சந்தக்கவிமணி ஈ) கவிமணி

**[இ) சந்தக்கவிமணி]**

4. **'மெத்த வணிகலமும் மேவலால்' - கோடிட்ட சொல்லின் பொருள்**

அ) தருதல் ஆ) பெறுதல்

இ) பெருதல் ஈ) வழங்குதல்

**[ஆ) பெறுதல்]**

5. **'விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும்' - இதில் 'உடுக்கள்' எனும் சொல்லின் பொருள்**

அ) சூரியன் ஆ) சந்திரன்

இ) நட்சத்திரங்கள் ஈ) மேகம்

**[இ) நட்சத்திரங்கள்]**

6. **சிறப்புப் பெயரை உரியவருக்குப் பொருத்துக.**

அ) பாவலரேறு - 1) தமிழழகனார்

ஆ) மொழிஞாயிறு - 2) க. அப்பாத்துரையார்

இ) சந்தக்கவிமணி - 3) பெருஞ்சித்திரனார்

ஈ) பன்மொழிப்புலவர் - 4) தேவநேயப்பாவாணர்

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 1, 2

இ) 2, 3, 4, 1 ஈ) 3, 2, 4, 1

**[ஆ) 3, 4, 1, 2]**

7. **இயற்பெயரை உரியவருக்குப் பொருத்துக.**

அ) துரை மாணிக்கம் - 1) தேவநேயம்

ஆ) பாவாணர் - 2) இரா.இளங்குமரனார்

இ) தமிழ்த்திரு - 3) தமிழழகனார்

ஈ) சண்முகசுந்தரம் - 4) பெருஞ்சித்திரனார்

அ) 1, 3, 4, 2 ஆ) 4, 1, 2, 3

இ) 2, 3, 4, 1 ஈ) 3, 2, 4, 1

**[ஆ) 4, 1, 2, 3]**

8. **ஈண்டு என்பதன் பொருள்**

அ) இங்கு ஆ) அங்கு

இ) ஈனுதல் ஈ) இரண்டு **[அ) இங்கு]**

## குறுவினா

1. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**
   - ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுறமொழிதல் எனப்படும்.
   - இதனைச் சிலேடை என்றும் அழைப்பர்.

2. **மூன்று வகையான சங்குகளின் பெயர்களைச் சுட்டுக.**
   - வெண்சங்கு
   - சலஞ்சலம்
   - பாஞ்சசன்யம்

3. **தமிழழகனார் குறிப்பு வரைக.**
   - சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முக சுந்தரம்.
   - இலக்கணப் புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்.
   - பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

4. **துய்ப்ப அதுமேவலால்- இருபொருள் தருக.**
   - **துய்ப்ப** - கற்பது, தருதல்
   - **மேவலால்** - பொருந்துதல், பெறுதல்

5. **கிடந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**கிட + த் (ந்) + த் + அ**

கிட - பகுதி

த் - சந்தி

'த்' - 'ந்' ஆக மாறியது விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

6. **முத்தமிழ், முச்சங்கம்- இலக்கணக்குறிப்பு தருக.**

முத்தமிழ், முச்சங்கம்- பண்புத்தொகைகள்

விரிவானம்

## மொழி க

# உரைநடையின் அணிநலன்கள்

– எழில்முதல்வன்

### கற்பவை கற்றபின் (பக்கம்.15)

| இலக்கியத்தொடர் | இடம்பெற்றுள்ள நயம் |
|---|---|
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | உவமை |
| பசுமரத்தாணி போல | உவமை |
| கரகமலம் குவித்தாள் | உருவகம் |
| விழிகயல் | உருவகம் |
| உந்தி உணர்வெழுப்பு | மோனை |
| முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் | மோனை |

கற்கண்டு

## மொழி க

# எழுத்து, சொல்

### பலவுள் தெரிக.

1. 'அளபெடை' என்னும் சொல்லுக்குப் பொருள்
அ) குறுகி ஒலித்தல் ஆ) நீண்டு ஒலித்தல்
இ) இனிய ஓசை ஈ) அளவாக ஒலித்தல்
**[ஆ) நீண்டு ஒலித்தல்]**

2. உயிரளபெடை ---- வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **[ஆ) மூன்று]**

3. செய்யுளிசை அளபெடையின் வேறு பெயர்
அ) இசைநிறை ஆ) இன்னிசை
இ) சொல்லிசை ஈ) ஒற்றளபெடை
**[அ) இசைநிறை]**

4. பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது.
அ) செய்யுளிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
**[இ) சொல்லிசை அளபெடை]**

5. 'ஓஒதல்' 'உறாஅர்க்கு' - இதில் அமைந்த அளபெடை
அ) இன்னிசை ஆ) இசைநிறை
இ) சொல்லிசை ஈ) ஒற்றளபெடை
**[ஆ) இசைநிறை]**

6. விகுதி பெற்ற தொழிற்பெயருக்குச் சான்று
அ) நடவாமை ஆ) நடத்தை
இ) வாழ்க்கை ஈ) இனிமை **[இ) வாழ்க்கை]**

7. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர்
அ) விகுதி பெற்ற தொழிற்பெயர்
ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்
இ) வினையடை
ஈ) முதல்நிலைத் திரிந்த தொழிற்பெயர்
**[அ) விகுதி பெற்ற தொழிற்பெயர்]**

8. **கண்ணன் படித்தான் என்பது**
அ) தனிமொழி ஆ) தொடர்மொழி
இ) பொதுமொழி ஈ) வினையெச்சம்
**[ஆ) தொடர்மொழி]**

9. **முதனிலை திரிந்த தொழிற்பெயர்**
அ) கெடுதல் ஆ) கெடு
இ) கேடு ஈ) கொடு **[இ) கேடு]**

10. **மொழியின் சிறப்பை அறியத் துணை செய்வது**
அ) எழுத்து ஆ) இலக்கணம்
இ) சொல் ஈ) யாப்பு **[ஆ) இலக்கணம்]**

## குறுவினா

1. **விகுதி பெற்ற தொழிற்பெயர் என்பது யாது?**
- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.

**சான்று:**

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |

2. **சார்பெழுத்தின் வகைகளைக் குறிப்பிடுக.**
- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்
- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக்குறுக்கம்

3. **அளபெடுத்தல் என்றால் என்ன?**
- சொற்கள் நீண்டு ஒலிப்பது அளபெடுத்தல் எனப்படும்.

4. **செய்யுளிசை அளபெடையை விளக்குக.**
- செய்யுளில் ஓசை குறையும்போது அதை நிறைவு செய்ய செய்யுளில் வந்துள்ள நெட்டெழுத்துகள் அளபெடுப்பதை (நீண்டு ஒலிப்பதை) செய்யுளிசை அளபெடை என்பர்.
- இதனை இசைநிறை அளபெடை என்றும் அழைப்பர்.
- எ.கா. ஓஓதல்

5. **சொல்லிசை அளபெடையை விளக்குக.**
- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.
- எ.கா. உரனசைஇ - (நசை - விருப்பம், நசைஇ - விரும்பி)

6. **எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**
- ஒரு செயல் நடக்காமல் இருப்பதனைச் சொல்வது எதிர்மறை ஆகும்.
- ஒரு தொழிற்பெயர் எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.

**நடத்தல்** - தொழிற்பெயர்.
**நடவாமை** - எதிர்மறைத் தொழிற்பெயர்.

7. **முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன? எ-கா. தருக.**
- ஒரு தொழிற்பெயர் விகுதி பெறாமல் பகுதி மட்டுமே நின்று தொழிற்பெயரானால் அது "முதனிலைத் தொழிற்பெயர்" எனப்படும்.

பாடுதல் - தொழிற்பெயர்
பாடு - முதனிலைத் தொழிற்பெயர்.

8. **முதனிலை திரிந்த தொழிற்பெயரை விளக்குக.**
- விகுதி பெறாமல் பகுதி திரிந்து வருவதுமுதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

எ.கா. பெறுதல் - பெறு - பேறு

9. **அளபெடை எத்தனை வகைப்படும் அவை யாவை?**
- அளபெடை இரண்டு வகைப்படும்.
- அவை உயிரளபெடை, ஒற்றளபெடை

10. **ஒற்றளபெடையை விவரி?**
- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

**எ.கா.** எஃஃகிலங்கிய, கலங்ங்கினான்.

11. **சொல் என்றால் என்ன?**
- ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள்தரும் வகையில் அமைவது சொல் ஆகும்.

12. **வினையாலணையும் பெயரை விவரி?**
- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபை ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- இது மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

## சிறுவினா

1. **மூவகை மொழிகள் யாவை? விளக்குக.**
   - **மொழி-** தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி என மூன்று வகைப்படும்.
   - தனி மொழி- ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது. (எ.கா.) நில், வா, செல், படித்தான்.
   - தொடர்மொழி - ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவது. (எ.கா.) வேலன் படித்தான், அவன் வீட்டிற்கு நாளை செல்வேன்.
   - பொதுமொழி- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழியாகும்.
   - எ.கா. எட்டு -'8' என்னும் எண்ணைக் குறிக்கும் பொழுது தனிமொழி. (தனிமொழி)
   - எட்டு - எள் + து -'எள்ளை உண்' என்னும் பொருளில் வரும் பொழுது பொதுமொழி. (பொது மொழி)

## கற்பவை கற்றபின்(பக்கம்.18)

1. **தேன், நூல், பை, மலர், வா - இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**
   தேன் சுவையானது, நூல் பல கல், பை கொண்டுவா, மலர் மலர்ந்தது, அருகில்வா.

2. **வினையடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**
   காண் - காணுதல், காண்டல், காணல், காணாமை
   சிரி - சிரித்தல், சிரியாமை
   படி - படித்தல், படியாமை
   தடு - தடுத்தல், தடுக்காமை

3. **தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**
   **அண்ணண்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)
   **தம்பி** : **கடைக்கு** (தனிமொழி)
   **அண்ணன்** : **கடைக்குச் சென்று என்ன வாங்குவாய்?** (தொடர்மொழி)
   **தம்பி** : **எழுதும் தாள், எழுதுகோல்** (தொடர்மொழி)
   **அண்ணன்** : **ஏன்?** (தனிமொழி)
   **தம்பி** : **எழுதுவதற்குத் தாளும், ஏடும், எழுதுகோலும் தீர்ந்துவிட்டன.**

4. **மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்'.**
   இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.
   அழைக்கும் - அழைத்தல், அழைப்பு
   ஏறுவேன் - ஏறுதல்
   அமர்வேன் - அமர்தல், அமர்வு
   பார்ப்பேன் - பார்த்தல், பார்வை
   எய்தும் - எய்துதல்

5. **கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**
   கட்டு, சொட்டு - முதனிலைத் தொழிற்பெயர்
   கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
   வழிபாடு, கோறல் - விகுதிபெற்ற தொழிற்பெயர்

## பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல்

1. ''காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு''

1. **'மயலுறுத்து' என்பதன் பொருள் : (ஆகஸ்ட்.22)**
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய்
இ) அடங்கச் செய் ஈ) சீராக
2. **ப்ராண ரஸம் - பொருள் தருக.**
அ) உயிர் வளி ஆ) கார்பன்-டை-ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக-டை-ஆக்ஸைடு
3. **'மிகுந்த' - இலக்கணக் குறிப்பு தருக.**
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை
4. **நீரலைகளின் - பிரித்தெழுதுக.**
அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

---

2. உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே

**வினாக்கள்:**

1. **இப்பாடலை இயற்றியவர்**
அ) க.சச்சிதானந்தன்
ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
அ) தமிழ்ச்சிட்டு ஆ) கனிச்சாறு
இ) பாவியக்கொத்து ஈ) நூறாசிரியம்
3. **உந்தி-என்னும் சொல்லின் பொருள்**
அ) தூண்டி ஆ) நெஞ்சு
இ) கழுத்து ஈ) முதுகு
4. **உணர்வெழுப்ப - இச்சொல்லைப் பிரித்தால் வருவது.**
அ) உணர்வு + எழுப்ப ஆ) உணர் + வெழுப்ப
இ) உணர்வு + வெழுப்ப ஈ) உணர் + எழுப்ப
5. **செந்தாமரை - இலக்கணக் குறிப்புத் தருக.**
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**விடைகள் : 1-ஆ, 2-ஆ, 3-அ, 4-அ, 5-ஆ**

---

3. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

**வினாக்கள்:**

1. **இப்பாடலை இயற்றியவர்**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
ஆ) பாவாணர் இ) தமிழழகனார்
ஈ) காளமேகப் புலவர்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
அ) தமிழ்த்திரட்டு ஆ) தனிப்பாடல் திரட்டு
இ) வெண்பா நூறு ஈ) வெண்பாமாலை
3. **பாடலில் இடம்பெற்ற சீர்மோனை**
அ) முத்தமிழ் - மெத்த ஆ) முத்தமிழ் - முச்சங்கம்
இ) அணைகிடந்தே - இணைகிடந்த
ஈ) மெத்த - நித்தம்
4. **முத்தமிழ் - பிரித்து எழுதுக.**
அ) முத்து + தமிழ் ஆ) மு + தமிழ்
இ) முத் + தமிழ் ஈ) மூன்று + தமிழ்
5. **சிலேடை என்பது**
அ) ஒருபொருள் குறித்து வருவது
ஆ) இருபொருள்பட வருவது
இ) மூன்றுபொருள் பட வருவது
ஈ) நான்கு பொருள்பட வருவது

**விடைகள் : 1-இ, 2-ஆ, 3-ஆ, 4-ஈ, 5-ஆ**

---

4. **பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (பெ.ஆ.க-5)**
''முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு''.

**வினாக்கள்:**

1. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பெருங்கௌசிகனார்
இ) தமிழழகனார் ஈ) நக்கீரர்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல்-**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு
3. **பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி.**
அ) இரட்டுற மொழிதல் அணி
ஆ) தீவக அணி இ) வஞ்சப் புகழ்ச்சி அணி
ஈ) நிரல் நிறை அணி
4. **தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது**
அ) சங்கப் பலகை ஆ) கடல்
இ) அணிகலன் ஈ) புலவர்கள்
5. **தொழிற்பெயர் அல்லாத சொல் -**
அ) துய்த்தல் ஆ) மேவல்
இ) அணிகலன் ஈ) காணல்

**விடைகள் : 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ, 5-இ**

---

5. நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு.
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை

**வினாக்கள்:**

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
   அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
   இ) கலித்தொகை ஈ) குறுந்தொகை
2. **இப்பாடலை இயற்றிய ஆசிரியர்**
   அ) நப்பூதனார் ஆ) பூதஞ்சேந்தனார்
   இ) தமிழழகனார் ஈ) பெருஞ்சித்திரனார்
3. **நேமி - என்ற சொல்லின் பொருள்**
   அ) நியமித்தல் ஆ) சக்கரம்
   இ) மலை ஈ) புல்லாங்குழல்
4. **தடக்கை - என்பதன் இலக்கணக்குறிப்பு**
   அ) பண்புப்பெயர் ஆ) சினைப்பெயர்
   இ) உரிச்சொல்தொடர் ஈ) இடைச்சொல்தொடர்
5. **இப்பாடலில் குறிப்பிடப்படும் இறைவன்**
   அ) சிவன் ஆ) திருமால்
   இ) பிரம்மன் ஈ) வருணன்

**விடைகள் : 1-ஆ, 2-அ, 3-ஆ, 4-இ, 5-ஆ**

---

6. ''நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
   வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
   நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
   பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு,
   கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
   பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

**(பெ.ஆ.க-2, மார்ச்.24)**

**வினாக்கள்:**

1. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
   அ) நப்பசலையார் ஆ) நக்கீரர்
   இ) நப்பூதனார் ஈ) நாதகுத்தனார்
2. **இப்பாடல் இடம் பெற்ற நூல்**
   அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
   இ) நற்றிணை ஈ) குறுந்தொகை
3. **நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்**
   அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
   இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்
4. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்**
   அ) பெரும்பெயல்... பொழிந்த... ஆ) பாடுஇமிழ்... பனிக்கடல்...
   இ) பாடுஇமிழ்... கோடுகொண்டு... ஈ) நீர்செல... நிமிர்ந்த...
5. **பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை -**
   அ) தடக்கை ஆ) வளைஇ
   இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு
6. **'தடக்கை' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.**
   அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை
   இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

**விடைகள் : 1-இ,2-அ, 3-ஈ, 4-இ, 5-ஆ , 6-அ**

---

7. **பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (அ.மா.தே)**
   ''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
   வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
   நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
   பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
   கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
   பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

**வினாக்கள்:**

1. **இப்பாடலின் ஆசிரியர்-**
   அ) ஔவையார் ஆ) நப்பூதனார்
   இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்
2. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்-**
   அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல்
   இ) முல்லைப்பாட்டு ஈ)நற்றிணை
3. **'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள்?**
   அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்
   இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்
4. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**
   அ) பாடுஇமிழ்... கோடுகொண்டு... ஆ) கோடுகொண்டு... பெரும்பெயல்...
   இ) நனந்தலை... வலம்புரி... ஈ) பொறித்த... பொழிந்த...
5. **'தடக்கை' இலக்கணக்குறிப்பு தருக.**
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) உரிச்சொல் தொடர் ஈ) உவமைத்தொகை

**விடைகள் : 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ, 5-இ**

---

8. விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
   வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
   திருந்துற நோக்கல் வருகஎன உரைத்தல்
   எழுதல் முன் மகிழ்வன செப்பல்
   பொருந்து மற்றுஅவன் தன் அருகுற இருத்தல்
   போமெனில் பின்செல்வ தாதல்
   பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
   ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

**வினாக்கள்:**

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
   அ) காசிக்காண்டம் ஆ) இல்லொழுக்கம்
   இ) காஞ்சிப்புராணம் ஈ) வாழ்க்கை வெளிச்சம்
2. **இப்பாடலை இயற்றியவர்**
   அ) குமரகுருபரர் ஆ) அதிவீரராம பாண்டியர்
   இ) தமிழழகனார் ஈ) பெருஞ்சித்திரனார்
3. **நோக்கல் என்பதன் இலக்கணக்குறிப்பு**
   அ) பண்புப்பெயர் ஆ) தொழிற்பெயர்
   இ) வினைமுற்று ஈ) வினையாலணையும் பெயர்
4. **செல்வதாதல் - என்ற சொல்லைப் பிரித்தால்**
   அ) செல் + வதாதல் ஆ) செல்வது + ஆதல்
   இ) செல்வ + தாதல் ஈ) செல்வது + தாதல்
5. **இப்பாடல் குறிப்பிடும் விருந்தோம்பல் படிநிலைகள்**
   அ) ஏழு ஆ) எட்டு
   இ) ஒன்பது ஈ) பத்து

**விடைகள் : 1-அ, 2-ஆ, 3-ஆ, 4-ஆ, 5-இ**

9. அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி

**வினாக்கள்:**

1. **'அசைஇ' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு**
அ) சொல்லிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) வினையெச்சம்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
அ) மலைபடுகடாம் ஆ) கலித்தொகை
இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை
3. **கடும்பு என்ற சொல்லின் பொருள்**
அ) கோபம் ஆ) சுற்றம்
இ) விருப்பம் ஈ) கடுமை
4. **இப்பாடலை இயற்றிய புலவர்**
அ) நப்பூதனார் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) பெருங்கௌசிகனார் ஈ) ஔவையார்
5. **அன்று அவண் அசைஇ - இதில் பயின்று வரும் தொடை.**
அ) அடிமோனை ஆ) அடி எதுகை
இ) சீர்மோனை ஈ) சீர் எதுகை

**விடைகள் : 1-அ, 2-அ, 3-ஆ, 4-இ, 5-இ**

10. **பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடைதருக. (ப.ஆ.க-3)**
''அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,''

**வினாக்கள்:**

1. **''அசைஇ'' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு**
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) சொல்லிசை அளபெடை
ஈ) செய்யுளிசை அளபெடை
2. **'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - இவ்வடியில் 'பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்**
அ) சிற்றூர் ஆ) பேரூர்
இ) கடற்கரை ஈ) மூதூர்
3. **பாடல் இடம்பெற்ற நூல் -**
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்
4. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்**
அ) அன்று, அலங்கு, கன்று, சிலம்பு
ஆ) அன்று, அசைஇ, அவண், அல்கி
இ) சேந்த, செப்பம், செயலை, சிலம்பு
ஈ) அல்கி, போகி, எய்தி, எனினே
5. **<u>அல்</u>சேர்ந்து <u>அல்</u>கி - இதில் அல் என்பதன் பொருள் யாது?**
அ) இல்லை ஆ) இரவு
இ) உறவு ஈ) தங்கி

**விடைகள் : 1-இ, 2-அ, 3-ஆ, 4-அ, 5-ஆ**

11. நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,
நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட்புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்

**வினாக்கள்:**

1. **இப்பாடலில் குறிப்பிடப்படும் மன்னன்**
அ) சேரன் ஆ) சோழன்
இ) நன்னன் ஈ) பாண்டியன்
2. **இப்பாடலை இயற்றிய புலவர்**
அ) நப்பூதனார் ஆ) இளங்கோவடிகள்
இ) பெருங்கௌசிகனார் ஈ) பாரதிதாசன்
3. **பொம்மல் என்ற சொல்லின் பொருள்**
அ) பொம்மை ஆ) பெரிதாதல்
இ) சோறு ஈ) பூக்கள்
4. **பரூஉக் - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு**
அ) இன்னிசை அளபெடை
ஆ) சொல்லிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை
ஈ) ஏழாம் வேற்றுமை விரி
5. **பரூஉக்குறை - குரூஉக்கண் இதில் பயின்று வரும் தொடை.**
அ) அளபெடை ஆ) மோனை
இ) இயைபு ஈ) முரண்

**விடைகள் : 1-இ, 2-இ, 3-இ, 4-ஆ, 5-அ**

12. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

**வினாக்கள்:**

1. **இப்பாடலை இயற்றியவர்**
அ) குலசேகராழ்வார் ஆ) திருப்பாணாழ்வார்
இ) நப்பூதனார் ஈ) திருமங்கை ஆழ்வார்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல்**
அ) திருவாய்மொழி ஆ) பெரிய திருமொழி
இ) பெருமாள் திருமொழி ஈ) திருவிருத்தம்
3. **வித்துவக்கோடு உள்ள மாநிலம்**
அ) கேரளா ஆ) தமிழ்நாடு
இ) கர்நாடகா ஈ) ஆந்திரா

விடுதலைநாள் விழாவைக் கொண்டாட எண்ணியுள்ளோம். எனவே, தாங்கள் எங்கள் பள்ளிக்கு வருகை தந்து விடுதலை நாள் விழாவிற்குத் தலைமையேற்று சிறப்பித்துத் தருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்தலைவன்,
தமிழமுதன்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
கலைமாமணி சங்கர பாண்டியன் அவர்கள்,
வீரவநல்லூர்,
சேரன்மாதேவி அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம்,
தமிழ்நாடு.

அஞ்சல் தலை

2. **புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக. (பெ.ஆ.க-2, மார்ச்.24)**

32, அண்ணாசாலை,
சென்னை,
03-03-2020.

அன்புத் தங்கை இலக்கியாவிற்கு,

அன்பு அண்ணன் இலக்குவன் எழுதுவது. அன்புத் தங்கையே நீ அங்கு நலமா? நான் இங்கு நலம். சித்தப்பா, சித்தி, தம்பி நலமாக இருக்கிறார்களா? கேட்டதாகச் சொல்.

நீ பன்னிரண்டாம் வகுப்பில் 590 மதிப்பெண் பெற்றதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீ உயர்கல்வி பயிலச் செல்வதால் சித்தப்பா உனக்குத் திறன்பேசி ஒன்று வாங்கித் தந்ததாகக் கடிதம் எழுதியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி. திறன்பேசி ஒரு கையடக்கக் கணினி போன்றது.

**''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்''**

- என்னும் குறளின் கருத்தைப் போல எதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறாயோ அதனை இணையத்தில் சென்று ஒரு சில நொடிகளில் தேடித் தெரிந்து கொள்ளலாம். இணையவழிக் கல்வி வகுப்புகளைக் காணலாம். புதிய மொழிகளைக் கற்கலாம், நூலகம் செல்லாமலே தேவையான நூல்களைப் பதிவிறக்கம் செய்து படிக்கலாம். அன்றாடச் செய்திகளைப் பார்க்கலாம். இணையவழி வங்கிச் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யலாம். வரைபட உதவியுடன் பயணம் செல்லும் இடத்தைக் கண்டுபிடிக்கலாம். மருத்துவத் தகவல்களை அறியலாம். மொத்தத்தில் மந்திரவாதியின் மந்திரக் கோல் போல நாம் நினைத்ததை எல்லாம் செயல்படுத்தக் கூடிய ஆற்றல் உடையது திறன்பேசி. இதை நம் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தினால் வாழ்க்கை மேன்மை அடையும். பொழுது போக்கிற்குப் பயன்படுத்தினால் நம் வாழ்வையே வீணடித்துவிடும். எனவே பயனுள்ள வகையில் திறன்பேசியைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறுவாய் என வாழ்த்திக் கடிதத்தை நிறைவு செய்கிறேன். நீ இக்கடிதத்திற்குப் பதில் எழுது. இல்லையேல் மின்னஞ்சலில் கடிதம் அனுப்பு. உன் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்பு அண்ணன்,
இலக்குவன்.

**உறைமேல் முகவரி**

பெறுநர்
க. இலக்கியா,
2A, கார்மல் தெரு,
கன்னியாகுமரி.

அஞ்சல் தலை

**3. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறு பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக.** **(பெ.ஆ.க-3, செப்-20)**

03, காமராசர் தெரு,
நாமக்கல்,
05-05-2020.

அன்புள்ள நண்பா,

நான் இங்கு நலம். நீ நலமாக இருக்கிறாயா? உன் அப்பா, அம்மா, தம்பி நலமாக இருக்கிறார்களா? நலம் விசாரித்ததாகச் சொல். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. அதில் நீ சென்றுவந்த சுற்றுலாவைப் பற்றிக் கூறியிருந்தாய். அதைப் படித்தவுடன் எனக்கும் அங்குச் செல்ல வேண்டும் போல் ஆசையாக உள்ளது.

நண்பா! நான் சமீபத்தில் காந்தியடிகளின் 'சத்திய சோதனை' நூலைப் படித்தேன். சிறுவயதிலிருந்தே பயந்த சுபாவமுடைய காந்தியடிகள் இவ்வளவு பெரிய போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய நிகழ்வுகளைப் பார்க்கும்போது சாதாரண மனிதர்களாகிய நாம் கூட சரித்திர புருஷர்களாக மாற முடியும் என்ற நம்பிக்கையைத் தருகிறது. அறவழிப் போராட்டத்திற்கு அவர் கூறும் காரணம் அருமை! ''வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது'' என்று கூறினார். நெருப்பை நீரால்தான் அணைக்க முடியும். வன்முறையை அன்பு, அருள் ஆகிய வழிகளில்தான் தடுக்க முடியும். அறவழியில் கிடைக்கும் விடுதலையே நிலைக்கும் என்று கூறுகிறார். அதுபோல் மனிதநேயம் குறித்து அவர் கொடுக்கும் விளக்கமும் அருமை. இதுபோல் பல வியப்பூட்டும் செய்திகள் அதில் மூழ்கிக் கிடக்கின்றன. நீயும் நேரம் கிடைக்கும்போது அந்த நூலை எடுத்துப்படி.

அடுத்தமுறை இன்னொரு தலைப்பில் உன்னுடன் உரையாடலாம் என்று நினைக்கிறேன். இப்போது விடை பெறுகிறேன். உன் பதிலை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்,
இனியன்.

**உறைமேல் முகவரி**

| பெறுநர் | அஞ்சல் தலை |
|---|---|
| க.அன்புச்செல்வன்,<br>39, தென்றல் தெரு,<br>திருவண்ணாமலை. | |

---

**4. ''பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்'' - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்தத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி, தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**(பெ.ஆ.க-4, செப்-20)**

**அனுப்புநர்**

அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

**பெறுநர்**

தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்** : பள்ளித்தூய்மை குறித்த செயல்திட்ட வரைவுக்கு ஒப்புதல் வழங்கிச் செயல்படுத்த வேண்டுதல் சார்பாக.

# மெல்லக் கற்போருக்கான முழுமையான கையேடு


நூலாசிரியர்

**முனைவர்.மு.சந்திரவடிவு**, M.A., B.Ed., M.Phil., Ph.D.,

பட்டதாரி ஆசிரியை (தமிழ்),

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,

அவினாசி - 641 654,

திருப்பூர் மாவட்டம்.

## இயல்கள் - 1, 2, 3

### குறுவினாக்கள்

1. **‘வேங்கை’ என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**
   - தொடர்மொழி → வேம் + கை = வேகின்றகை
   - பொதுமொழி → 1. வேங்கை மரம், 2. வேகின்ற கை.

2. **ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
   - சிலப்பதிகாரம்
   - மணிமேகலை
   - சீவகசிந்தாமணி
   - வளையாபதி
   - குண்டலகேசி

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. - சரி
   ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. - தவறு
   ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. - சரி
   **பிழைக்கான காரணம்**
   - ஒரு சீப்பில் தாறு அமையாது.

4. **‘உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்’ - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**
   - இன்னிசை அளபெடை
   - இனிய ஓசைக்காக அளபெடுப்பது

5. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**
   - பழங்கள் உண்ணலாம்.
   - பழங்‘கள்’ உண்ணக்கூடாது.

6. **உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**
   - மரம் நடுவோம்; தூய காற்று பெறுவோம்.
   - காற்று மாசு உயிருக்குக் கேடு.
   - மரம் கடவுள் தந்த வரம்.

7. **வசன கவிதை - குறிப்பு வரைக.**
   - வசனம் + கவிதை → வசனகவிதை
   - யாப்பு இல்லை.
   - தமிழில் அறிமுகம் செய்தவர் பாரதியார்.

8. **தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.**
   - தண்ணீர் குடி → தண்ணீரைக் குடி
     கண்ணன் தண்ணீர் குடித்தான்.
   - தயிர்க்குடம் → தயிரை உடைய குடம்.
     எங்கள் வீட்டில் தயிர்க்குடம் உள்ளது.

9. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**
   - தம்பி! அழாதே!
   - அம்மா விரைவில் வந்துவிடுவார்.
   - வா! விளையாடலாம்.
   - வா! இனிப்பு சாப்பிடலாம்.

10. **மாஅல் - பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.**
    - பொருள் → திருமால்
    - இலக்கணக்குறிப்பு → செய்யுளிசை அளபெடை

11. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**
    - வருக! வருக!
    - உள்ளே வாருங்கள்.
    - தண்ணீர் குடியுங்கள்.
    - உட்காருங்கள்.
    - சாப்பிடலாம் வாருங்கள்.
    - மிகவும் மகிழ்ச்சி!

12. **விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**
    - இல்லை.
    - நல்ல மனம், நல்ல குணம் வேண்டும்.

13. **‘எழுது என்றாள்’ என்பது விரைவு காரணமாக ‘எழுதுஎழுது என்றாள்’ என அடுக்குத் தொடரானது. ‘சிரித்துப் பேசினார்’ என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?**
    - சிரித்துச் சிரித்துப் பேசினார்.
    - மகிழ்ச்சி காரணமாக அடுக்குத் தொடரானது.

**14. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?**

- இறடி - தினை, பொம்மல் - சோறு
- தினைச் சோற்றை உணவாகப் பெறுகுவீர்.

**15. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?**

- பாரதியார் கவிஞர் → பெயர்ப் பயனிலை
- நூலகம் சென்றார் → வினைப் பயனிலை
- அவர் யார்? → வினாப் பயனிலை

**16. பூவின் நிலைகள் யாவை?**

- அரும்பு
- போது
- மலர்
- வீ
- செம்மல்

**17. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- மொழி 3 வகைப்படும்.
- 1. தனிமொழி 2. தொடர் மொழி 3. பொதுமொழி

**18. முல்லைப்பாட்டு - குறிப்பு வரைக.**

- பத்துப்பாட்டு நூல்
- 103 அடிகள்
- எழுதியவர் நப்பூதனார்
- முல்லை நிலம் பற்றிப் பாடப்பட்டது.

**19. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**

- இரண்டு பொருள்படக் கூறுதல்.
- வேறுபெயர் → சிலேடை

**20. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- தொகைநிலைத் தொடர் 6 வகைப்படும்.
- வேற்றுமைத்தொகை
- பண்புத் தொகை
- வினைத்தொகை
- உவமைத் தொகை
- உம்மைத் தொகை
- அன்மொழித்தொகை

**21. காசிக்காண்டம் - குறிப்பு வரைக.**

- காசி நகரத்தின் பெருமை கூறும் நூல்.
- அதிவீரராம பாண்டியர் எழுதியது.

**22. 'நச்சப்படாதவன் செல்வம்' - வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

- நச்சப்படாதவன் → பிறருக்கு உதவி செய்யாததால், ஒருவராலும் விரும்பப்படாதவன்.

**23. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

- இன்னிசை அளபெடை.

**24. 'எய்துவர் எய்தாப் பழி' - இக்குறளுக்குப் பொருந்தும் வாய்பாடு எது?**

- கூவிளம் தேமா மலர்

**25. அளபெடுத்தல் என்றால் என்ன?**

- நீண்டு ஒலித்தல்.

**26. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- அளபெடை 2 வகைப்படும்.
- 1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை

**27. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

- ஒழுக்கம்.
- அனைத்துச் சிறப்புகளையும் தரும்.

**28. பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள் யாவை?**

- தென்மொழி
- தமிழ்ச்சிட்டு

**29. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

- இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு.

**30. தாவரத்தின் பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

- பிஞ்சு
- பூம்பிஞ்சு
- வடு
- மூசு
- குரும்பை
- இளநீர்
- கவ்வை
- கச்சல்
- கருக்கல்

**31. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- உயிரளபெடை 3 வகைப்படும்.
  1. செய்யுளிசை அளபெடை
  2. இன்னிசை அளபெடை
  3. சொல்லிசை அளபெடை

**32. தமிழ்ச்சொல்வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

- தமிழில் உள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் பிற திராவிடமொழிகளில் இல்லை.
- பிற திராவிடமொழிகளில் உள்ள சிறப்புச் சொற்கள் தமிழிலும் உள்ளன.

33. **காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?**

**ஆற்றல்**

- ‘வளி மிகின் வலி இல்லை’ - புறநானூறு - ஐயூர் முடவனார்.

**வேகம்**

- ‘கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது’ - புறநானூறு - மதுரை இளநாகனார்

34. **ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து எழுதுக.**

- ஹிப்பாலஸ் என்பவர் கிரேக்க மாலுமி.
- காலம் கி.பி.முதல் நூற்றாண்டு.
- இவர் பருவக்காற்றின் உதவியால் முசிறித் துறைமுகத்திற்குப் புதியவழி கண்டுபிடித்தார்.
- எனவே, இந்தப் பருவக்காற்றிற்கு ‘ஹிப்பாலஸ் பருவக்காற்று’ என்று யவனர் பெயர் சூட்டினர்.
- யவனர் கடல் வணிகம் பெருகியது.

35. **யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?**

- நடுநிலையுடன் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

## சிறுவினாக்கள்

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

- அன்னைமொழி
- அழகு, இளமை
- பழமை, புதுமை
- மண்ணுலகப் பேரரசு
- தென்னன் மகள்
- திருக்குறள்
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை
- ஐம்பெருங்காப்பியங்கள்

2. **இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

- நெல்நாற்று நட்டேன்.
- வாழைக்கன்று நட்டேன்.
- தென்னம்பிள்ளை நட்டேன்.
- விளாக்குட்டி நட்டேன்.
- பனை மடலி நட்டேன்.

3. **அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது - வினைமுற்றுகளைத் தொழில் பெயர்களாக மாற்றி எழுதுக.**

- அறிந்தது, அறியாதது → அறிதல், அறியாமை
- புரிந்தது, புரியாதது → புரிதல், புரியாமை
- தெரிந்தது, தெரியாதது → தெரிதல், தெரியாமை
- பிறந்தது, பிறவாதது → பிறத்தல், பிறவாமை

4. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

- **தமிழ் →**
  - ✶ முத்தமிழ் (இயல், இசை, நாடகம்)
  - ✶ முச்சங்கம் (முதல், இடை, கடை)
  - ✶ ஐம்பெருங்காப்பியங்கள்
  - ✶ சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை
- **கடல் →**
  - ✶ முத்தினை அமிழ்ந்து எடுத்தல்
  - ✶ மூன்று வகை சங்கு
  - ✶ வணிகக் கப்பல்கள்
  - ✶ சங்கினைக் காத்தல்

5. **‘நீர்’ தன்னைப் பற்றிப் பேசினால் - உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

- மழையாக நான்
- கடலாக நான்
- உணவாக நான்
- உயிராக நான்
- பார் போற்றும் நான்

6. **சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசுவது போல் ஓர் உரையாடல் அமைக்க.**

**சோலைக் காற்று** : வணக்கம் நண்பா!
**மின்விசிறிக் காற்று** : வணக்கம் தோழா!
**சோலைக் காற்று** : நலமா?
**மின்விசிறிக் காற்று** : நலம். நீ எப்படி இருக்கிறாய்?
**சோலைக் காற்று** : நான் மிகவும் நலமாக உள்ளேன்.
**மின்விசிறிக் காற்று** : மக்கள் உன்னைத்தான் விரும்புகிறார்கள்
**சோலைக் காற்று** : வருத்தப்படாதே நண்பா! இயற்கையை எல்லோரும் விரும்புவது இயல்புதானே!
**மின்விசிறிக் காற்று** : மின்சாரம் இல்லையென்றால் நான் இல்லை.
**சோலைக் காற்று** : ஆனால், நீ இன்றி மக்கள் தூங்குவது இல்லை.
**மின்விசிறிக் காற்று** : சென்று வரட்டுமா?
**சோலைக் காற்று** : சென்று வா. பிறகு சந்திப்போம்.

7. **தோட்டத்தில் மல்லிகைப் பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள் வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.**
   - மல்லிகைப் பூ → இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
   - பூங்கொடி → அன்மொழித்தொகை
   - ஆடு மாடுகள் → உம்மைத் தொகை
   - குடிநீர் → வினைத்தொகை
   - மணி பார்த்தாள் → இரண்டாம் வேற்றுமைத் தொகை

8. **மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப்தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

   - இலைகளில் சொட்டும் நீர் அழகாக உள்ளது.
   - உடலில் ஓடும் மெல்லிய குளிர் இதமாக உள்ளது.
   - தேங்கிய குட்டையில் 'சளப்தளப்' என்று குழந்தைகள் குதிக்கின்றன.
   - சிறுவர்கள் ஓடும் நீரில் காகிதக் கப்பல் விட்டு விளையாடுகிறார்கள்.
   - வானவில் அழகாக உள்ளது.

9. **முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?**
   - முல்லை → தினை, வரகு, சாமை, முதிரை
   - மருதம் → செந்நெல், வெண்ணெல், அரிசி

10. **கண்ணே கண்ணுறங்கு!**
**காலையில் நீயெழும்பு!**
**மாமழை பெய்கையிலே!**
**மாம்பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு!**
**ஆடிஆடி ஓய்ந்துறங்கு!**
**- இப்பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**
   - கண்ணே கண்ணுறங்கு → விளித்தொடர்
   - காலையில் நீயெழும்பு → வேற்றுமைத் தொடர்
   - மாமழை பெய்கையிலே → உரிச்சொல் தொடர்
   - மாம்பூவே கண்ணுறங்கு → விளித்தொடர்
   - பாடினேன் தாலாட்டு → வினைமுற்றுத் தொடர்
   - ஆடிஆடி ஓய்ந்துறங்கு → அடுக்குத் தொடர்

11. **கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**
   - பகலில் ஓய்வு எடுத்துச் செல்லுங்கள்.
   - இரவில் சேர்ந்து தங்குங்கள்.
   - ஒளிரும் பூங்கொத்துகளை அணியுங்கள்.
   - அசோக மரங்கள் உள்ள வழியில் செல்லுங்கள்.
   - மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
   - நன்னனின் கூத்தன் என்று சொல்லுங்கள்.
   - வீட்டிற்குள் உரிமையுடன் நுழையுங்கள்.
   - உறவினர் போல் பழகுவர்.
   - இனிய சொற்களைப் பேசுவர்.
   - நெய்யில் வெந்த மாமிசப் பொரியலும் தினைச் சோறும் உணவாகக் கிடைக்கும்.

12. **புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.**
**திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.**
**- இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து உனது கருத்துகளை எழுதுக.**
   - இன்று வீடுகளில் திண்ணை இல்லை.
   - உறவினர்களே விருந்தினர்கள்.
   - புதியவர்களை விருந்தினராக யாரும் கருதுவது இல்லை.
   - வீட்டில் நடந்த விழாக்கள் மண்டபங்களில் நடைபெறுகின்றன.

13. **வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு.**
**- குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.**
   - உவமை அணி.
   - உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் வந்து, உவம உருபு வெளிப்பட்டு வருவது உவமை அணி.
   - **உவமை** → வேலொடு நின்றான் இடு என்றது
   **உவமேயம்** → கோலொடு நின்றான் இரவு
   **உவமஉருபு** → போலும்
   - எனவே, இது உவமை அணி ஆகும்.

14. **வாழைஇலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.**

- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
- உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகிய பகுதி இருக்கும்.
- உண்பவரின் வலப்பக்கம் வாழை இலையின் விரிந்த பகுதி இருக்கும்.
- இடப்பக்கம் உப்பு, ஊறுகாய், இனிப்பு போன்றவை வைக்கப்படும்.
- வலப்பக்கம் காய்கறி, கீரை, கூட்டு போன்றவை வைக்கப்படும்.
- நடுவில் சோறு வைக்கப்படும்.
- வாழை இலை உடல்நலத்தைக் காக்கும்; இளமையைப் பேணும்.

15. **காற்று மாசடைதலைத் தவிர்க்கும் முறைகளைக் கூறுக.**

- மரங்கள் வளர்த்தல்.
- குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுதல்.
- பொதுப்போக்குவரத்தை மேற்கொள்ளுதல்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்துதல்.
- புதைவடிவ எரிபொருட்களைத் தவிர்த்தல்.
- சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தாமை.
- பட்டாசுகள் வெடிக்காமல் இருத்தல்.

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

**இந்தக் காட்சி.......**
**கண்களுக்கு அழகு**
**கருத்துக்கு விருந்து**
**மனதிற்கு இனிமை**
**சிந்தைக்குச் செழுமை**
**நயமான காட்சி**
**நவிலும் நல்கருத்து**
..........................
...........................
**(படத்திற்கு ஏற்ற வரிகள்)**

**இயல் - 1**

- அறிவுப் பூட்டைத்
  திறக்கும் சாவி
  புத்தகம் ஒன்றே.....

**இயல் - 2**

- மரத்தின் மகத்துவம்
  அறிவாய் மனிதா!

**இயல் - 3**

- ஏழையின் உள்ளம்
  கடவுள் வாழும் இல்லம்

## கடிதம் எழுதுதல்

1. **மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**வாழ்த்து மடல்**

16, பாரதிநகர்,
அஅஅ (ஊர்),
01.07.2022.

அன்பு நண்பா,

நான் நலம். நீ நலமா? உன் குடும்பத்தார் நலமா? அறிய ஆவல்.

நீ மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று, முதல் பரிசு பெற்ற செய்தியை அறிந்தேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். உனது வெற்றிக்குக் காரணம் உனது முயற்சியே. உன்னை மனமார வாழ்த்துகிறேன். உனது வெற்றி தொடரட்டும்!

இப்படிக்கு,
என்றும் அன்புடன்,
XXX (பெயர்)

**உறைமேல் முகவரி**

பெறுநர்
மு.அகிலன்,
22, காந்திநகர்,
கோவை - 49.

2. **உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.**

அஅஅ (ஊர்),
01.07.2022.

அனுப்புநர்
XXX (பெயர்),
16, பாரதி நகர்,
அஅஅ (ஊர்).

பெறுநர்
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
ஆஆஆ (ஊர்).

ஐயா,

பொருள் :உணவு விடுதி மீது புகார் செய்தல் - சார்பு.

-----

வணக்கம். நான் நேற்று மாலை எங்கள் ஊரில் உள்ள தென்றல் உணவு விடுதிக்குச் சென்றேன். சாம்பார் சாதம் சாப்பிட்டேன். உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. இரசீது நகலை இத்துடன் இணைத்துள்ளேன். தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
XXX (பெயர்).

உறைமேல் முகவரி
பெறுநர்
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
ஆஆஆ (ஊர்).

## நிற்க அதற்குத் தக

1. **இன்சொல் வழியின் நன்மைகளையும் தீயசொல் வழியின் தீமைகளையும் பட்டியலிடுக.**

அ)

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| 1 பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| 2. அறம் வளரும் | அறம் தேயும் |
| 3. புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| 4. நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| 5. அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

ஆ) **இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

- நாங்கள் செல்லும் வழி இன்சொல் வழி.
- எங்கள் நண்பருக்குக் காட்டும் வழி இன்சொல் வழி.

2. **புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப் படுத்தி எழுதுக.**
   - வெளியே செல்லமாட்டேன்.
   - மின்சாதனங்களைப் பயன்படுத்த மாட்டேன்.
   - மாடியில் இருக்க மாட்டேன்.
   - தரைத்தளத்தில் தங்குவேன்.
   - வாகனங்களைக் கவனமாக இயக்குவேன்.
   - கடல் பகுதிக்குச் செல்ல மாட்டேன்.
   - வானொலி அறிவிப்பைப் பின்பற்றுவேன்.
   - தேவையான பொருட்களை வாங்கி வைப்பேன்.

3. **நமது பாரம்பரிய உணவு குறித்த மருத்துவர் க.சிவராமனின் கருத்திற்கு உனது பதில் என்னவாக இருக்கும்?**
   - காலநிலைக்கு ஏற்ற உணவை உண்ண வேண்டும்.
   - துரித உணவுகளை உண்ணக் கூடாது.
   - மேலைநாட்டு உணவுகள் வேண்டாம்.
   - பாரம்பரிய உணவுகளை உண்ண வேண்டும்.
   - இயற்கை உணவே இனிய வாழ்வு.
   - ‘உணவே மருந்து’ என்று வாழ வேண்டும்.
   - தானியங்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவை உடலுக்கு நன்மை தருபவை.
   - நோயற்ற வாழ்வு வாழ, உணவில் கவனம் தேவை.

4. **தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடல் எழுதுக.**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய்? (தொடர் மொழி)
**தம்பி** : கடைக்கு (தனிமொழி)
**அண்ணன்** : என்ன வாங்கச் செல்கிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : குறிப்பு ஏடும் எழுதுகோலும் (தொடர்மொழி)
**அண்ணன்** : எதற்கு? (தனிமொழி)
**தம்பி** : வீட்டுப்பாடம் எழுத (தொடர்மொழி)

5. **வினாத்தொடர்கள் அமைக்க.**
   - சுவைக்காத இளநீர் உண்டா?
   - காப்பியச் சுவை அறியாத புலவர் உண்டா?
   - குறளின்பம் அறியாத புலவர் உண்டா?
   - கல்வி இன்றி மனிதகுல மேன்மை உண்டா?
   - விடுமுறை நாள் இல்லாத வாரம் உண்டா?

## மொழிப்பயிற்சி

1. **கூட்டப்பெயர்களை எழுதுக.**

**கல்** - குவியல்
**புல்** - கட்டு
**பழம்** - குலை
**ஆடு** - மந்தை

2. **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

1. **சிலை - சீலை**
   சிலையைத் திரைச் சீலையால் மறை.
2. **தொடு - தோடு**
   என் தோட்டைத் தொடு.

3. **மடு - மாடு**
மடுவில் மாடு விழுந்தது.
4. **மலை - மாலை**
மலைக்கு மாலையில் செல்.
5. **வளி - வாளி**
வளியை வாளியில் பிடிக்க முடியாது.
6. **விடு - வீடு**
பள்ளி விட்டவுடன் வீட்டுக்குச் செல்வேன்.

**3. பழமொழிகளை நிறைவு செய்க.**

1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
4. விருந்தும் மருந்தும் மூன்று நாள்.
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

**4. கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | Vowel | - | உயிரெழுத்து |
| 2. | Consonant | - | மெய்யெழுத்து |
| 3. | Homograph | - | ஒப்பெழுத்து |
| 4. | Monolingual | - | ஒரு மொழி |
| 5. | Conversation | - | உரையாடல் |
| 6. | Discussion | - | கலந்துரையாடல் |
| 7. | Storm | - | புயல் |
| 8. | Tornado | - | சூறாவளி |
| 9. | Tempest | - | பெருங்காற்று |
| 10. | Land Breeze | - | நிலக்காற்று |
| 11. | Sea Breeze | - | கடல் காற்று |
| 12. | Whirl wind | - | சுழல் காற்று |
| 13. | Classical literature | - | செவ்விலக்கியம் |
| 14. | Epic literature | - | காப்பிய இலக்கியம் |
| 15. | Devotional literature | - | பக்தி இலக்கியம் |
| 16. | Ancient literature | - | பண்டையஇலக்கியம் |
| 17. | Regional literature | - | வட்டார இலக்கியம் |
| 18. | Folk literature | - | நாட்டுப்புற இலக்கியம் |
| 19. | Modern literature | - | நவீன இலக்கியம் |

**5. தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

| | | |
|---|---|---|
| **இன்சொல்** | பண்புத் தொகை | இன்சொல் பேசுக. |
| **எழுகதிர்** | வினைத் தொகை | எழுகதிர் அழகு. |
| **கீரி பாம்பு** | உம்மைத் தொகை | கீரிபாம்பு போல் சண்டையிடாதீர். |
| **முத்துப்பல்** | உவமைத் தொகை | முத்துப்பல் சிரிப்பு அழகு. |
| **மலை வாழ்வார்** | வேற்றுமைத் தொகை | மலை வாழ்வார் வந்தனர். |
| **பூங்குழல் வந்தாள்** | அன்மொழித் தொகை | பூங்குழல் நேற்று வந்தாள். |

**6. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

''தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே''

**விடை:**

தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே''

**7. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.'
2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**8. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

**தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ**

தேன்மழை, விண்மழை, பூமலை, மணிமேகலை, தேன்பூ, வான்மழை, பூவிலங்கு, பொன்விலங்கு, பொன்மணி, செய்வான்.

**9. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.**

★ நாற்றிசையும் செல்லாத நாடில்லை - நான்கு - ௪

★ எறும்புதன் கையால் எண்சாண் - எட்டு - அ

★ ஐந்து சால்பு ஊன்றிய தூண் - ஐந்து - ரு

★ நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
நான்கு, இரண்டு - ௪, உ

★ ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி - ஆயிரம் - க000

**10. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.**

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

மறத்தின் - மரத்தின்
பரித்து - பறித்து
மனத்தை - மணத்தை

**11. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும் - **நறுமணம்**
2. பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும் - **புதுமை**
3. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை - **காற்று**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும் - **விண்மீன்**
5. ஓரெழுத்தில் சோலை -இரண்டெழுத்தில் வனம் - **காடு**

**12. விடுபட்ட எழுத்துகளை நிரப்புக. அந்த எழுத்துகளை இணைத்து நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

1. இறகு (பறவையிடம் இருப்பது)
2. குருதி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
3. வாள் (மன்னரிடம் இருப்பது)
4. அக்கா (தங்கைக்கு மூத்தவர்)
5. மதி (அறிவின் மறுபெயர்)
6. படகு (நீரில் செல்வது)

நூலின் பெயர் - திருக்குறள்

## விரிவானம்

**1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

**புயலிலே ஒரு தோணி**

**முன்னுரை**

புயலிலே ஒரு தோணி என்ற கதையை எழுதியவர் ப.சிங்காரம். இந்தக் கதை அவரின் நேரடி அனுபவம் ஆகும்.

**வருணனைகள்**

★ கொளுத்தும் வெயில் இமை நேரத்தில் மறைந்தது.
★ காற்றைக் காணோம். ஒரே இறுக்கம்.
★ இடிமுழக்கம் வானைப் பிளந்தது.
★ வான் பிளந்து தீ கக்கியது.
★ வானம் உடைந்தது. வெள்ளம் கொட்டியது.
★ சூறாவளி ஆடிக் குதித்தது.
★ வானுடன் கடல் கலந்துவிட்டது.
★ திடுமென அமைதி.

**அடுக்குத் தொடர்கள்**

★ தொங்கான் நடுநடுங்கித் தாவித்தாவிக் குதித்தது.
★ தொங்கான் நொறுநொறு என்று நொறுங்கியது.
★ சுழன்று சுழன்று கூத்தாடியது.
★ கிறுகிறுத்தது விழுந்தது. இருட்டிருட்டு
★ கரை! கரை! கரை!

**ஒலிக்குறிப்புச் சொற்கள்**

★ சிலுசிலுப்பு, மரமரப்பு, ரொய்ங்புய்ங், ரொய்ங்புய்ங், நொறுநொறு.

**முடிவுரை**

புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை அழகாக விவரிக்கின்றன.

**2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தத்தை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.**

**கோபல்லபுரத்து மக்கள்**

**முன்னுரை**

'கோபல்லபுரத்து மக்கள்' என்ற கதையை எழுதியவர் கி.ராஜநாராயணன். இந்தக் கதை கிராம மக்களின் விருந்தோம்பலை அழகாகக் கூறுகிறது.

**அன்னமளித்த அன்னமய்யா**

★ சுப்பையாவின் நிலத்தில் அருகு எடுக்கும் வேலை நடந்து கொண்டு இருந்தது.
★ அப்போது, அன்னமய்யா சாமியார் போன்ற ஒருவனை அங்கே அழைத்து வந்தான்.

- ★ அன்னமய்யா கூட்டி வந்த ஆள் ஒரு வாலிபன். அவன் நடக்க முடியாமல் நடந்து வந்தான்.
- ★ அந்த வாலிபன் அன்னமய்யாவிடம் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கேட்டான்.
- ★ அன்னமய்யா நீச்சுத் தண்ணீர் கொடுத்தான்.
- ★ அந்த வாலிபன் அதை 'மடக் மடக்' என்று குடித்தான்.
- ★ களைப்பு நீங்கிய வாலிபன், வேப்பமர நிழலில் நிம்மதியாகத் தூங்கினான்.
- ★ அன்னமய்யாவிற்கு மனநிறைவு ஏற்பட்டது.
- ★ தூங்கும் குழந்தையைத் தாய் பார்ப்பது போல, அந்த வாலிபனை அன்போடு பார்த்தான் அன்னமய்யா.
- ★ தூங்கி எழுந்த வாலிபனை அடுத்த புஞ்சைக்கு அழைத்துச் சென்று கம்மஞ்சோறு உண்ண வைத்தான்.

**முடிவுரை**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதை அழகாக விவரிக்கிறது.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

## நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

- ★ பூமித்தாய் கடலை ஆடையாக உடுத்தி உள்ளாள்.
- ★ பூமித்தாயின் முகமாக பாரதம் உள்ளது.
- ★ தக்காணம் நெற்றியாக உள்ளது.
- ★ தமிழகம் நெற்றியில் வைத்த திலகமாக உள்ளது.
- ★ திலகத்தின் மணம் போல் தமிழ் மணம் எல்லாத் திசைகளிலும் மணக்கிறது.
- ★ தமிழே! தாயே! உனது திறத்தையும் இளமையையும் வியந்து போற்றுகிறேன்.

**தமிழ் வாழ்த்து**

- ★ அன்னைமொழி
- ★ அழகு, இளமை
- ★ பழமை, புதுமை
- ★ மண்ணுலகப் பேரரசு
- ★ தென்னன் மகள்
- ★ திருக்குறள்
- ★ பத்துப்பாட்டு
- ★ எட்டுத்தொகை
- ★ ஐம்பெருங்காப்பியங்கள்
- ★ தமிழே! தாயே! உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகிறேன்.

மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தும் தமிழ் மொழியின் சிறப்புகளை அழகாக விவரிக்கின்றன.

2. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

**தமிழின் சொல்வளம்**

- ★ தமிழ்மொழி மிகுந்த சொல்வளம் கொண்டது.
- ★ திராவிட மொழிகளின் தாயாகத் தமிழ் விளங்குகிறது.
- ★ பிறமொழித் தாக்கம் இல்லை.
- ★ தனித்து இயங்கும்.
- ★ ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.
- ★ பல பொருள் குறித்த ஒரு சொல் தமிழில் ஏராளம்.
- ★ (எ.கா.) தாவரத்தின் அடிப்பகுதி → தாள், தண்டு, கோல், தட்டு, கழி, கழை, அடி
- ★ பூவின் நிலைகள் → அரும்பு, போது, மலர், வீ, செம்மல்
- ★ இளம் பயிர்வகை → நாற்று, கன்று, பிள்ளை, மடலி, வடலி, குட்டி, பைங்கூழ்
- ★ இலை வகைகள் → இலை, தோகை, தாள், ஓலை, சண்டு, சருகு.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை**

- ★ காலச்சூழல் மாற்றம்
- ★ அறிவியல் வளர்ச்சி
- ★ தொழில்நுட்ப வளர்ச்சி
- ★ மொழி வளர
- ★ மொழிநிலைபெற
- ★ புதிய கருத்துகளை உணர்த்த
- ★ மொழிபெயர்ப்புகள் செய்ய
- ★ மொழியின் எதிர்காலம் சிறக்க
- ★ உலக அளவில் பேசப்பட

- மேற்கண்ட காரணங்களால் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை ஏற்பட்டு உள்ளது.

3. **முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரிக்க.**

- ★ மேகம் பெருமழை பொழிகிறது.
- ★ மாலையில் முதிய பெண்கள் ஊர்ப்பக்கம் சென்றனர்.
- ★ முல்லைப் பூக்களையும் நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர்.

★ தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டனர்.

★ அங்கு, சிறு கன்று ஒன்று பசியால் வாடிக் கொண்டு இருந்தது.

★ அதைப் பார்த்த ஓர் இடைமகள், ''புல்லை மேய்ந்து உன் தாய்மார் இப்போது வந்துவிடுவர், வருந்தாதே'' என்றாள்.

★ முதிய பெண்கள் தலைவியிடம், ''நற்சொல் கேட்டோம். உன் தலைவன் பகைவரை வென்று விரைவில் வருவான், வருந்தாதே'' என்று கூறினர்.

**4. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

★ கல்வி வழிகாட்டல்

★ தொழில் வழிகாட்டல்

★ ஆளுமை வளர வழிகாட்டல்

★ உடல்நலம் சார்ந்த வழிகாட்டல்

★ மனநலம் சார்ந்த வழிகாட்டல்

★ உறவுகள் மேம்பட வழிகாட்டல்

★ பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வழிகாட்டல்

★ திருமண வழிகாட்டல்

- என்று பல நிலைகளில் வழிகாட்டுதல் நிகழ்கிறது.

**5. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை விவரித்து எழுதுக.**

★ தமிழரின் சிறந்த பண்பு விருந்தோம்பல்

★ நானும் அதைக் கடைப்பிடித்தேன்.

★ என் மாமா ஒருநாள் வீட்டிற்கு வந்தார்.

★ அவரை எனக்கு மிகவும் பிடிக்கும்.

★ 'வாருங்கள் வாருங்கள்' என்று வரவேற்றேன்.

★ பிறகு, ஒரு நாற்காலியில் அமரச் செய்தேன்.

★ குடிக்கத் தண்ணீர் கொடுத்தேன்.

★ 'வீட்டில் அனைவரும் நலமா?' என்று கேட்டேன்.

★ வாழை இலையில் அம்மா உணவு அளித்தார்.

★ அம்மாவிற்கு உதவிகள் செய்தேன்.

★ மாமா சாப்பிட்டு முடித்ததும், மாமாவுடன் பேசிக் கொண்டு இருந்தேன்.

★ மாமாவை ஓய்வு எடுக்கச் சொன்னேன்.

★ பிறகு, மாமாவை கோவில், கடைவீதி போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றேன்.

★ மாமா கிளம்பும் போது, வாசல்வரை சென்று வழி அனுப்பினேன்.

★ மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது.

## பொதுக்கட்டுரை

**1. குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.**

**- இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**'சான்றோர் வளர்த்த தமிழ்'**

**முன்னுரை**

சான்றோர் வளர்த்த தமிழ் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழக எல்லை**

குமரிக்கடல் முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்டது.

**தமிழன்னை**

தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழ்கிறாள்.

**இலக்கியங்கள்**

பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். மேல்கணக்கும் கீழ்க்கணக்கும் படைத்தனர்.

**சான்றோர்**

தொல்காப்பியர், திருவள்ளுவர், கபிலர், பரணர், கம்பர், இளங்கோவடிகள், ஔவையார், சேக்கிழார், பரஞ்சோதி முனிவர், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், ஜி.யு.போப், வீரமாமுனிவர், கால்டுவெல், ஆறுமுக நாவலர் என தமிழ் வளர்த்த சான்றோர்கள் ஏராளம் பேர் ஆவர்.

**சங்கத்தமிழ்**

மதுரையில் முதல், இடை, கடை என மூன்று சங்கங்கள் அமைக்கப்பட்டு, தமிழ் வளர்க்கப்பட்டது. இவை அழிந்த பின் நான்காம் சங்கமும் அமைக்கப்பட்டது.

**தமிழின் சிறப்புகள்**

தமிழ் செம்மொழி ஆகும். உலகம் தோன்றியபோதே தோன்றியது. அகம், புறம் என வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தது. என்றும் அழியாதது.

**முடிவுரை**

தமிழ் மொழியை வளர்க்க நம்மால் இயன்றதைச் செய்வோம். தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை.

## விரிவானம்

**1. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.**

**முன்னுரை:**

அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பன். அவரைப் பற்றி இங்கு காண்போம்.

**வீரப்பன்:**

- வீரப்பன் ஒரு கட்டிடத் தொழிலாளி.
- மிகவும் ஏழை.
- வீரப்பனின் நண்பன் குப்புசாமி.
- அனாதையான குப்புசாமிக்கு வறுமையிலும் உதவுகிறார் வீரப்பன்.
- குப்புசாமிக்கு கடுமையான வயிற்றுவலி. வேலைக்குப் போக முடியவில்லை.
- வீரப்பன் கடன் வாங்கி குப்புசாமிக்கு உதவுகிறார்.
- வைத்தியம் பார்ப்பதற்காக குப்புசாமி சென்னையில் உள்ள தன் சித்தி வீட்டிற்குச் செல்கிறான்.
- குப்புசாமி விரைவில் குணமாக வேண்டும் என்று வீரப்பன் தினமும் கோவிலுக்குச் சென்று வேண்டுகிறார்.
- சென்னை செல்லும் ஆறுமுகத்திடம், மூன்று ரூபாயும் ஒரு கடிதமும் கொடுத்து அனுப்புகிறார்.
- அந்தக் கடிதத்தில், 'உன் நினைவாகவே உள்ளது; உன்னை நேரில் பார்க்க ஆசை. ஆனால், நேரில் வந்தால் இந்த மூன்று ரூபாயும் பேருந்துக்கு செலவாகிவிடும். பணம் கிடைத்தால், உன்னைப் பார்க்க வருகிறேன்' என்று எழுதி இருந்தார்.

**முடிவுரை:**

வறுமையிலும் செம்மையாக வாழும் வீரப்பன் நம் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறார்.

**''கருணை மிக்க உள்ளம், கடவுள் வாழும் இல்லம்''**

## பா நயம் பாராட்டல்

1. **தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!**

1. **சொல்நயம்**

இந்தப் பாடல் சிறந்த சொல்நயத்தைப் பெற்றுள்ளது. (தேனினும் இனிய, ஒளிர்வுறும், ஒளிர்தமிழ், வானினும் ஓங்கிய.....)

2. **பொருள்நயம்**

இந்தப் பாடல் சிறந்த பொருள் நயத்தைப் பெற்றுள்ளது. (தேனினும் இனிய செந்தமிழ் மொழி, ஊனினும் ஒளிர்வுறும் மொழி, மாந்தருக்கிரு கணா வயங்கு நன்மொழி)

3. **மோனை நயம்**

தேனினும் - தென்னாடு, ஊனினும் - உணர்வினு, தானனி - தழைத்தினி

4. **எதுகை நயம்**

தேனினும் - இனிய, ஊனினும் - வானினும், தானனி - தனித்தமிழ்

5. **இயைபு நயம்**

மொழியே - மொழியே

6. **அணி நயம்**

இந்தப் பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது. தமிழ்மொழியின் சிறப்பு உயர்வாகக் கூறப்பட்டுள்ளது.

7. **சந்த நயம்**

இந்தப் பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற சந்த நயத்தைப் பெற்றுள்ளது.

2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

- கண்ணதாசன்

1. **சொல் நயம்**

இந்தப் பாடல் சிறந்த சொல்நயத்தைப் பெற்றுள்ளது. (காலக்கணிதம், புகழுடைத் தெய்வம், அவனும் யானுமே......)

2. **பொருள் நயம்**

இந்தப் பாடல் சிறந்த பொருள் நயத்தைப் பெற்றுள்ளது. (கருப்பொருளை உருப்பட வைத்தல்: இவைசரி என்றால் இயம்புவது என் தொழில்: அவனும் யானுமே அறிந்தவை)

3. **மோனை நயம்**

கவிஞன் - கருப்பொருள், இவைசரியென்றால் - இவை தவறாயின், ஆக்கல் - அவனும்,
ஆக்கல் - அளித்தல் - அழித்தல்

4. **எதுகை நயம்**

கருப்படு - உருப்பட, இவைசரியென்றால் - இவைதவறாயின்

5. **இயைபு நயம்**

தெய்வம் - செல்வம்

6. **அணிநயம்**

இந்தப் பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது. (காலக்கணிதம், புகழுடை தெய்வம் என்று கவிஞனை உருவகப்படுத்துகிறார்)

7. **முரண் நயம்**

சரி X தவறு: ஆக்கல் X அழித்தல்

8. **சந்த நயம்**

இந்தப் பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற சந்த நயத்தைப் பெற்றுள்ளது.

3. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

**காற்றைப் பாராட்டுதல்**

தெற்கிலிருந்து வீசும் இளம் தென்றல் காற்று நதியில் விளையாடி கொடியில் தலைசீவி மெல்ல நடந்து வருகின்றது. மென்மையாகத் தவழ்ந்து வரும் குழந்தைக்கு, கவிஞர் தென்றல் காற்றை ஒப்பிடுகிறார்.

**நயங்கள்**

1. **பொருள் நயம்**

இந்தப் பாடல் சிறந்த பொருள் நயத்தைப் பெற்றுள்ளது. குழந்தையின் அழகு மலரும் மலர், விடியும் பொழுது, இளந்தென்றல், தமிழ் மன்றம் போன்றவற்றோடு ஒப்பிடப்படுகின்றது.

2. **சொல் நயம்**

கலை அன்னமே, இளந்தென்றலே, பொதிகை மலை, தமிழ் மன்றம் போன்ற சொற்கள் பாடலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

3. **குறிப்பு நயம்**

கவிஞர் குழந்தையின் அழகைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

4. **மோனை நயம்**

மலர்ந்தும் - மலராத, விடிந்தும் - விடியாத, நதியில் - நடந்த, பொதிகை - பொலிந்த

5. **எதுகை நயம்**

மலர்ந்தும் - மலராத, விடிந்தும் - விடியாத

6. **முரண் நயம்**

மலர்ந்தும் X மலராத, விடிந்தும் X விடியாத

7. **அணி நயம்**

இந்தப் பாடலில் உவமை அணி பயின்று வந்துள்ளது. ('மலர்ந்தும் மலராத பாதிமலர் போல')

8. **சந்த நயம்**

இந்தப் பாடல் இசையோடு பாடுவதற்கு ஏற்ற சந்த நயத்தைப் பெற்றுள்ளது.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. அமுதன் தன் தந்தை மாணிக்கமணி அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் அமுதனிடம் 200/- ரூபாயும், 15 காந்தி தெரு, குமாரபாளையம் நீலகிரி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற அமுதனாக, தேர்வர் தன்னைக் கருதி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்துகொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்கவும்:**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**பகுதி -V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3x8=24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'
என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்கவும். **(அல்லது)**

ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

**குறிப்புகள்** : முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை. **(அல்லது)**

**ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

முன்னுரை - கொரோனா பெருந்தொற்று - தடுப்பு நடவடிக்கைகள் - விழிப்புணர்வுச் செயல்பாடுகள் - நமது கடமைகள் - முடிவுரை.

## அரசுப் பொதுத்தேர்வு
## மார்ச் - 2024

பத்தாம் வகுப்பு

**நேரம் : 15 நிமிடம் + 2.30 மணி** **மதிப்பெண்கள் : 100**

**பகுதி -I (மதிப்பெண்கள் : 15)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **15x1=15**

1. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'**
**- இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே:**
அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

2. **'மலர்க்கை' - தொகையின் வகையைத் தேர்க.**
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. **பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?**
அ) வானத்தையும் பாட்டையும்
ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும்
ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. **தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**
**- இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.**
அ) தாளாண்மை - தகைமைக்கண்
ஆ) தாளாண்மை - வேளாண்மை
இ) தகைமைக்கண் - தங்கிற்றே
ஈ) வேளாண்மை - செருக்கு

5. **''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.**
**''அதோ, அங்கே நிற்கும்.'' என்று மற்றொருவர் கூறியது ______ விடை.**
அ) ஐய வினா, வினா எதிர்வினாதல்
ஆ) அறி வினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. **'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க.**
அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை
இ) குழந்தையே வா! ஈ) குழந்தை வந்தது

7. **குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.**
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. **மேன்மை தரும் அறம் என்பது:**
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ்கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

9. **காசிக் காண்டம் என்பது:**
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

10. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.**
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

11. **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் மாநாடு:**
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா
இ) இந்தியா ஈ) இலங்கை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

**''நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,**
**கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி''**

12. **பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.**
அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம்
இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

13. **'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.**
அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம்
இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

14. **'தடக்கை' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.**
அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை
இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

15. **பாடலின் ஆசிரியரைத் தேர்க.**
அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்
இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21-**வது** வினாவிற்குக் **கட்டாயமாக** விடையளிக்கவும். **4x2=8**

16. தற்கால உரைடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

17. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.**
அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.
ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. **பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.**
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

20. செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

21. 'முயற்சி' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **5x2=10**

22. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

23. **இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.**
அ) கொடு - கோடு ஆ) இயற்கை - செயற்கை

24. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
மயங்கிய

25. **கலைச்சொற்கள் தருக.**
அ) Biotechnology ஆ) Myth

**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.**

**குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.**
**குறிப்பு :** எதிர்மறையாக மாற்றுக.
அ) பார்த்த படம் ஆ) எழுதாக் கவிதை

26. **குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.**
**குறிப்புகள் :** 1) சுவைக்காத இளநீர்
2) விடுமுறை நாள்

27. ''சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்'' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.
- இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

28. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். **2x3=6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியியல் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
இ) பெய்த மழை - வினைத் தொகையாக மாற்றுக.

31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **2x3=6**

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

33. நெடுநாளாகப் பார்க்க பண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**
அ) ''தென்னன் மகளே'' - எனத் தொடங்கி ''முடிதாழ வாழ்த்துவமே'' - என முடியும் அன்னை மொழியே பாடல். **(அல்லது)**
ஆ) ''வாளால் அறுத்துச் சுடினும்'' - எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். **2x3=6**

35. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்'.
- இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.
- இத்திருக்குறளில் பயின்று வரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

38. அ) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.

39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக. **(அல்லது)**
ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக. **(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்கவும்.**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?

ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது?

iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர்?

iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர்?

v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினைத் தருக.

## பகுதி - V

**(மதிப்பெண்கள் : 24)**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் **விரிவான** விடையளிக்கவும். **3x8=24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் ‘செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்’ என்ற தலைப்பில் விவரித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) எவரேனும் ஓர் அறிஞர் / சான்றோர் / புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன்வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) அழகிரி சாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தினைச் சுவைபட விளக்கி எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

**குறிப்பு:**

நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழி நடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர். **(அல்லது)**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, ‘சாலைப் பாதுகாப்பு’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**குறிப்புகள்:**

முன்னுரை - சாலை விதிகளை அறிவோம் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளுக்கான காரணங்கள் - தேவையான விழிப்புணர்வு - நம் கடமை - முடிவுரை.

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| சென்னை | M.K. ஸ்டோர்ஸ் - 044-25386143, F.A. ஸ்டோர்ஸ் - 97105-68240, M.R. ஸ்டோர்ஸ் - 91766-64596, அராபா புக் டிரேடர் - 044-25987868, கிங்ஸ் புக் ஹவுஸ் - 044-25367660, பிஸ்மி புக் சென்டர் - 044-25380666, லிம்ரா புக் சென்டர் - 99400-39953, பிரின்ஸ் புக் ஹவுஸ் - 044-42053926, நூர் புக் சென்டர் - 81487-23350, பழனிராஜ் - 98414-94023, தாம்பரம் : ஸ்ரீராம் அன் கோ - 044-22266431, ரெட்ஹில்ஸ் : திருமலை புக் சென்டர் - 98411-53261 |
| மதுரை | மனோ புக் சென்டர் - 0452-2621577, ஜெயம் புக் சென்டர் - 0452-2623636, வெற்றி புக் சென்டர் - 98434-61624, M.P.S.S. புக் ஷாப் - 80981-51515, சன்மதி டிரேடர்ஸ் - 97872 61333, மீனாட்சி புக் - 94432 62763, M.V. சதீஸ்குமார் - 98433-49892 |
| கோவை | மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் - 99943 43334, கண்ணன் புத்தக நிலையம் - 95858 88890, சேரன் புக் ஷாப் - 0422-2396623, முருகன் புக் டிப்போ - 93611-11510, பொள்ளாச்சி ; கலைமகள் ஸ்டோர்ஸ் - 04259-228738, அமிர்தம் பேப்பர் மார்ட் - 98651-03333, அன்னூர் - ஸ்ரீ கார்த்திகேயா ஸ்டோர்ஸ் - 94436 52226 |
| திருச்சி | ராசி பப்ளிகேசன்ஸ் - 0431-2703692, சுமதி பப்ளிகேசன்ஸ் - 0431-2703230, ஸ்ரீ முருகன் புக்சென்டர் - 0431-2703076, காயத்ரி புக் ஹவுஸ் - 97517-87873, ஸ்ரீராகவேந்திரா ஸ்டோர்ஸ் - 97887-57427, துறையூர் : கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் - 98656-58650 |
| விழுப்புரம் | சபரிநாதன் பிரதர்ஸ் - 04146-222581, புக் பார்க் - 99944-45135 |
| கள்ளக்குறிச்சி | கிருபா ஸ்டேசனரி - 04151-223114, |
| சேலம் | விக்னேஷ் புக் சென்டர் - 0427-4020409, S.V.S புக் ஷாப் - 98659-06262 |
| கடலூர் | பெல் புத்தக நிலையம் - 04142-652252 |
| சிதம்பரம் | வெற்றி புக் சென்டர் - 94432-22648, ஜெயம் புக் சென்டர் - 93630-60516 |
| தஞ்சாவூர் | ஸ்ரீனிவாசா புக் சென்டர் - 94865-25806, முருகன் பப்ளிகேசன்ஸ் - 96779-99905, கும்பகோணம் : ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ - 0435-2420750, ஒரத்தநாடு: செல்வ விநாயகா பேப்பர், - 99435-57292, R.S.V புக் சென்டர் - 9942968475 |
| திருவண்ணாமலை | பிச்சாண்டி முதலியார் - 94432 14725, K. உதயகுமார் - 94874-09687 |
| வேலூர் | பூமிநாதன் - 93451 72090, வேலூர் புக் சென்டர் - 04162-213250, திருப்பத்தூர் (வேலூர்) : ரவிக்குமார் - 97863 15453 |
| ஈரோடு | செந்தில் புக் பேலஸ் - 04242-214886, தனா புக் கம்பெனி - 99943-71123, செல்வம் புக் சென்டர் - 98431-99697, பள்ளிப்பாளையம் : அம்மன் சஞ்சீவி புக் சென்டர் - 97860-40230, பவானி : தனா புக் சென்டர் - 94862-30921, கோபி : கிராவிட்டி புக் சென்டர்-9385728528 |
| திருவாரூர் | வி. ராமச்சந்திரன் - 94866-86627 |
| ராமநாதபுரம் | ராமநாதசுவாமி புக் ஷாப் - 94434-91772, அருணா நோட் புக் சென்டர் - 98425-37005 |
| சிவகங்கை | நியூ அய்யனார் புக் ஷாப் - 9994079013, காரைக்குடி : ஞானம் புக் சென்டர் 9789886575 |
| கிருஷ்ணகிரி | ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் - 90253 13661 |
| திருநெல்வேலி | ஷியாமளா புக் ஷாப் - 94872-44633, சித்ராதேவி புக் சென்டர் - 76676-64293, ஸ்ரீகிருஷ்ணா புக்ஸ் - 98945-55484 |
| திண்டுக்கல் | அய்யனார் புக் சென்டர் - 95008-62024, பழனி : தர்சன் புக் எம்போரியம் - 8667218504 |
| திருப்பூர் | மகேஸ்வரி புக் ஸ்டால் - 94420-04254, சூர்யா பேப்பர் ஸ்டோர்ஸ் - 9994710201 |
| தேனி | மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் - 94439-29273, K. சுப்புராஜ் - 88703-16922 |
| நாமக்கல் | ஸ்ரீ கணபதி புக் சென்டர் - 70948-07585, திருச்செங்கோடு: சோழா புக் ஹவுஸ்-9842753949 |
| தர்மபுரி | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்க்ஷல் நீட்ஸ் 9150070034 |
| தூத்துக்குடி | ஸ்ரீ துர்கா ஸ்டோர்ஸ் - 96003-33452, ஈகிள் புக் சென்டர் - 9486688333 |
| புளியங்குடி | ஸ்டுடண்ட் புக் சென்டர் - 79046-69191 |
| விருதுநகர் | சேது புக் சென்டர் - 94864-61400, அருப்புக்கோட்டை : பாலாஜி புக் சென்டர் - 94439-13738 |

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)


**டால்பின் பப்ளிகேசன்ஸ்**

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646
93453 14146 / 93453 30937

Mail us : dolphin.pub2006@gmail.com

94427 17794
63743 17883